கேரளப் பாடநூல்

# அடிப்படைத் தமிழ்

**Kerala Reader**
**Tamil - Basic Text**

## வகுப்பு

## IX

கேரள அரசு
கல்வித்துறை


தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2010**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**Prepared by :**
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
First Edition 2010
Type setting: SCERT Computer Lab
© Government of Kerala • Department of Education

**அன்புள்ள மாணவர்களே,**

கல்விச் செயல்பாட்டில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. தனிமனித ஆளுமையின் வளர்ச்சிக்கும் அறிவாற்றலின் மேம்பாட்டிற்கும் ஆக்கபூர்வமான தாய்மொழிக்கல்வி இன்றியமையாததாக உள்ளது. எனவே, மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் தாய்மொழியை அணுகவேண்டியுள்ளது.

தமிழ் மொழியின், இலக்கியத்தின் வெவ்வேறு காலகட்டங்களைச் சுட்டிக்காட்டும் பல்வகைப் படைப்புகள் இப்பாடநூலில் இடம்பெற்றுள்ளன. சிந்திக்கவும் உள்வாங்கவும் கற்பனை செய்யவும் செயலாக்கவும் வெளியிடவும் தாய்மொழிக் கல்வி பயனளிக்கட்டும். பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் ஈடுபட்டு மொழித்திறனை மேம்படுத்தலாம்.

அதிக வாசிப்பை ஊக்குவிக்க இப்பாடநூல் தூண்டுகோலாக அமையும் என்று நம்புகிறோம். வாசித்தும் சிந்தித்தும் புதியதோர் உலகை உருவாக்க ஒன்றுபடுவோம்; முன்னேறுவோம்.

*வாழ்த்துகளுடன்,*

**பேராசிரியர் எம். ஏ. காதர்**
இயக்குநர்
எஸ்.சி.இ.ஆர்.டி

# Textbook Development Committee

## Tamil - IX

*Advisor*

Dr. Rajaram S, Professor (Rtd.), School of Indian Languages, Tamil University, Tanjore.

*Chairman*

Dr. Nainar M, Reader(Rtd.), University College, Thiruvananthapuram.

*Members*

Dr. Indra Manuel V, Associate Professor, Bishop Heber College, Trichy.

Dr. Jayakrishnan P, Lecturer, Dept. of Tamil, University of Kerala, Karyavattom Thiruvananthapuram.

Dr. Simon C, Reader (Rtd.), Govt.Victoria College, Palakkad.

Dr. Vijayalakshmi T, Lecturer, Tamil Dept. University College, Thiruvananthapuram.

Jasmin J, HSST, Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.

Dr. Karunanidhi M, HSST, Govt.Tamil HSS, Chalai, Thiruvananthapuram.

Dr. Kumar S, HSST, Panchayat HSS, Vandiperiyar, Idukki.

Vijayan A, HSST, Govt.HSS, Koduvayur, Palakkad.

Agnel Dominic R, HSA, St. Paul's HS, Kozhinjampara, Palakkad.

Albert Irudayaraj R, HSA, Govt. HS, Muthalamada, Palakkad.

Jahir Hussain A, HSA, BRC Trainer, Govt. UPS Compound, Chakka, Tvpm. North BRC.

Maria John Bosco A, HSA, St. Paul's HS, Kozhinjampara, Palakkad.

Senthil Kumar B, HSA, Sreekrishna HS, Nallepilli, Palakkad.

Singh M. B, HSA (Rtd.), Govt.Tamil HSS, Chalai, Thiruvananthapuram.

Vijila Rani M, HSA, Panchayat HSS, Vandiperiyar, Idukki.

*Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT.

*Artist*

Mohanan J, Drawing Teacher, Govt. VHSS, Mancha, Nedumangad.

*Expert*

Dr. Veerappan P, Professor & Head, DESSH, Regional Institute of Education (NCERT), Mysore.

State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முதுமையின் பெருமை | 7 |
| | • எந்தையும் தாயும் | 8 |
| | • படியேறும் வாசனைகள் | 14 |
| | • பெற்றமனம் | 18 |
| 2. | அறிவொளி | 24 |
| | • செவ்வாய் தோஷம் | 25 |
| | • நம்பிக்கைகள் | 33 |
| | • பகுத்தறிவு | 38 |
| 3. | நலவாழ்வு | 41 |
| | • போதை - நரகம் | 42 |
| | • குடி குடியைக் கெடுக்கும் | 46 |
| | • மாலுமியில்லாத மரக்கலம் | 50 |
| | சொற்களஞ்சியம் | 53 |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

## இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலைமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக்கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம் மற்றும் விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் மற்றும் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித மற்றும் கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# 2

# அறிவொளி

# செவ்வாய் தோஷம்

## ஞானி வளர்த்த பூனை

மாலை வழிபாடு நடந்த போதெல்லாம்
மடத்திலுள்ள பூனை குறுக்கும் நெடுக்கும்
ஓடியது.
எனவே மாலை வழிபாட்டின் போது
பூனையைக் கட்டிப்போட உத்தரவிட்டார் குரு.
குரு இறந்து வெகு நாட்களாகியும்
மாலை வழிபாட்டின்போது
தொடர்ந்து அந்தப் பூனையைக் கட்டிப்
போட்டனர்.
அந்தப் பூனை இறந்துவிடவே
மாலை வழிபாட்டின் போது
கட்டிப்போடுவதற்காக வேறொரு பூனையைக்
கொண்டு வந்தனர்.
ஆண்டு பல கடந்தபின், மாலை வழிபாட்டில்
பூனையின் பங்கு என்ன என்பதை
ஏடுகளில் எழுதி வைத்தனர் குருவின் சீடர்கள்!

**- அந்தோணி டிமெல்லே**
**(பறவையின் பாடல்)**

- இக்கவிதை வரிகள் உணர்த்தும் நம்பிக்கையின் தன்மையினைக் குழுக்களாகக் கலந்துரையாடி, உங்கள் கருத்துகளை வெளியிடுங்கள்.
- இப்பாடப்பகுதியில் வரும் நம்பிக்கைகள் போன்று தற்போது வழக்கிலுள்ள நம்பிக்கைகளால் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்ற விழாவின் சார்பாக நடத்தப்படும் 'இன்றைய சமுதாயமும் மூடநம்பிக்கைகளும்' என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்காகக் கருத்தரங்க உரை தயார் செய்க.



# டாக்டர் சுந்தரராமனுடன் ஒரு பேட்டி

*நம்முடைய கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் அறிவியல் கண்ணோட்டத்திற்கு முற்றிலும் எதிரானவையா?*

அனைத்துப் பழக்கவழக்கங்களும் முற்றிலும் எதிரானவை அல்ல. உதாரணத்திற்கு நம் மக்களிடம் குழந்தைகள் பிறந்தவுடன் தொப்புள் கொடியில் சாணம் வைப்பது என்னும் ஒரு பழக்கம் இருக்கிறது. அதேபோல எண்ணெய் தேய்த்துக் குளிப்பது என்று ஒரு பழக்கமிருக்கிறது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனால் உடல் நலத்திற்கு நல்லது என்பதெல்லாம் அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் இல்லை. எனினும் அந்தப் பழக்கத்தினால் உடலுக்குக் கெடுதல் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால் தொப்புள் கொடியில் சாணம் வைப்பதால் குழந்தையின் உயிருக்கே ஆபத்து உண்டாகும் நிலை உள்ளது. எனவே இந்தப் பழக்கவழக்கத்தை எதிர்த்து அறிவியல் கண்ணோட்டத்துடன் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

பழைய பழக்கவழக்கங்கள் எல்லாமே நிராகரிக்கப்பட வேண்டியவை அல்லது அறிவியல் கண்ணோட்டத்திற்கு முரணானவை என்று புரிந்துகொள்ளக் கூடாது. பழைய கலாச்சாரத்தில் மட்டுமல்ல; புதிய கலாச்சார பழக்கத்திலும் அறிவியல் கண்ணோட்டத்திற்கு எதிரான பழக்க வழக்கங்கள் நிறைய உண்டு. நான் டாக்டராக இருக்கும்பொழுது, ‘எனக்குச் சத்து ஊசி போடுங்க’ என்று நிறையபேர் வந்திருக்காங்க. சத்து என்பது ஊசிமூலம் உடலுக்குள் சென்றுவிடும் என்று நம்புவது ஒரு மூட நம்பிக்கைதான்.

*மூடநம்பிக்கைக்கு எதிரான பிரச்சாரம் மிக நுட்பமாக எடுத்துச் சொல்லப்படாத பொழுது அது ஒட்டுமொத்த கலாச்சாரத்திற்கு எதிரான பிரச்சாரமாக மாறி விடக் கூடிய ஆபத்து இருக்கிறதல்லவா?*

ஒரு கலாச்சாரத்தில் பல பழக்க வழக்கங்கள் இருக்கும். அவை அனைத்தும் காலங் காலமாப் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதனால் மட்டும் நீ அதை ஏற்றுக்கொள்ளாதே, அதற்கு எதிரான உண்மைகள் இருக்கும்பொழுது நீ அதை விட்டுவிடத் தயாராக இருக்க வேண்டும் என்ற நிதானமான கண்ணோட்டத்துடன்தான் கலாச்சாரத்தின் மற்ற பழக்கங்களிலிருந்து மூடப் பழக்க வழக்கங்களைப் பிரித்துக்காட்டி நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும். அதை விடுத்து ஒரேயடியாக ஓங்கி அடிப்பதனால் எதிர்விளைவுகள் ஏற்படத்தான் வாய்ப்பிருக்கிறது.

*பல்வேறு மூடநம்பிக்கைகளை எதிர்த்து ஒரு வலுவான இயக்கத்தை ஏன் அறிவியல் இயக்கம் நடத்தக்கூடாது?*

பல்வேறு மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்திருக்கிறோம். இயக்கங்கள் நடத்தியிருக்கிறோம். குறிப்பாக, ஒரு மூட நம்பிக்கை பிரச்சனையாக வெளிவரும்பொழுது அதை எதிர்த்துத் தெளிவான அறிவியல் கண்ணோட்டத்தை மக்கள் மத்தியில் தொடர்ந்து எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறோம். உதாரணமாகப் பால்குடிக்கும் பிள்ளையார் விஷயம் பரபரப்பாக மூன்றே நாளில் நாடெங்கும் பரவிய பொழுது அதை விளக்கி உடனடியாக நாங்கள் பிரச்சாரம் செய்தோம். அது பிள்ளையாராக இருந்தாலும் சரி, தஞ்சாவூர் பொம்மையாக இருந்தாலும் சரி, காந்தி சிலையாக இருந்தாலும் சரி இது நிகழும் வாய்ப்பினை மக்கள் மத்தியில் விளக்கினோம்.

ஆனால் பொதுவாக மூடநம்பிக்கை எதிர்ப்பு இயக்கம் என்று நாங்கள் நடத்தவில்லை. அது மக்களின் ஒட்டுமொத்த கலாச்சார பழக்க வழக்கங்களுக்கு எதிரான குரலாக வந்து மக்களிடமிருந்து தனிமைப்பட்டுவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது. எனவே அதை நிதானமான பக்குவத்தோடுதான் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

*தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணி என்ன?*

பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டரில் 1950 களிலும் அறிவியலை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் அனைத்துத் தேசிய மொழிகளிலும் அறிவியல் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளையும், அறிவியல் சொற்களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் இந்த இயக்கத்தை ஏன் கலாச்சார இயக்கமாக மாற்றக்கூடாது என்ற கேள்வி அறுபதுகளில் தோன்ற ஆரம்பித்து விட்டது.

அதன்பின் இது கலாச்சார இயக்கத்தின் ஒரு பகுதி என்ற புரிதலோடுதான் கேரளத்தில் 'கேரள சாஸ்திர சாகித்ய பரிஷத்' உருவாக்கப் பட்டது.

சமூகமாற்றத்திற்கு அறிவியலும் அறிவியல் சிந்தனையும் ஆற்றக் கூடிய முக்கிய பங்கு குறித்த ஜே.டி. பர்னாலுடைய கருத்துக்கள் எங்களுக்கு அழுத்தமான உந்து சக்தியாக இருந்தது.

நம் கலாச்சாரத்தில் பல அம்சங்கள் இருக்கின்றன. அதில் பல திருத்தங்களும் தேவைப் படுகின்றன. அதற்கு அறிவியல் சிந்தனையும் கண்ணோட்டமும் உதவும் என்ற பார்வையுடன் தான் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆரம்பிக் கப்பட்டது.

*அறிவியல் கண்ணோட்டம் என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?*

பல்வேறு விஷயங்கள், தகவல்களைத் தெரிந்து வைத்துக் கொள்வதென்பது மட்டும் அறிவியல் கண்ணோட்டமாகாது. எல்லாவற்றையும் புரிந்துகொள்ள கேள்வி எழுப்ப வேண்டியது, கேள்விக்குப் பதில் தேடவேண்டியது, பரிசோதனை செய்து செயலில் அது பொருந்துமா என்று பார்த்து அதிலிருந்து படிப்பினைகள் கற்றுக்கொள்ள வேண்டியது. நாம் சொல்லும் எதுவும் மாறலாம். அல்லது தவறாக இருக்கலாம் என்ற தன்னடக்கம் இருக்க வேண்டியது. மாற்றுக் கருத்துகளிலும் உண்மைகள் இருக்கலாம் என்ற தேடல் மனப்பான்மையோடு செயல்பட வேண்டியது. மதம் அல்லது வேறு நிறுவனங்களின் அதிகார பீடம் சொல்லியதை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது – இவையெல்லாம்தான் அறிவியல் கண்ணோட்டம்.

**(செம்மலர், மாதஇதழ்)**

- மூடப் பழக்கத்தைத் தவிர்த்து அறிவியல் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என ஆசிரியர் கூறக் காரணம் என்ன என்பதைக் கலந்துரையாடி, உங்களது கருத்துகளைக் குறிப்புகளாக வெளியிடுங்கள்.
- பாடப்பகுதியில் ஆசிரியர் குறிப்பிடும் மூடநம்பிக்கைகளைப் போன்று நாட்டுப் புறங்களில் வழங்குகின்ற மூட நம்பிக்கை குறித்த பழமொழிகள் திரட்டுக.
- சமுதாயத்தில் மூட நம்பிக்கைகள் இன்றும் வழக்கில் உள்ள நிலையில் அவற்றிற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான முத்திரை வாக்கியங்கள் தயார் செய்க.

# செவ்வாய் தோஷம்

முருக்கம்பட்டிக்கு லோகல் பண்டு ஆஸ் பத்திரிதான் உண்டு. அதாவது சின்னக் காய்ச் சல், தலைவலி, கைகால் உளைச்சல், வெட்டுக் காயம் அல்லது வேனல் கட்டி-இவைகளை மட் டிலுமே குணப்படுத்துவதற்கான வசதி அமைந் தது. கிராமவாசிகள் திடமான தேகமுள்ளவர்களா னதால் பட்டணத்துக்காரர்களைப் போல் நாகரி கமான வியாதிகளைப் பெறுவதில்லை. 'கொய்னா' மாத்திரம் மத்ய சர்க்காரின் மலேரியா எதிர்ப்பு முயற்சியால் கிராமவாசிகளிடையே இலவச விநியோகத்திற்காக வேண்டிய மட்டி லும் உண்டு.

டாக்டர் வீரபத்திர பிள்ளை எல்.எம்.பி. அந்தப் பிரதேசத்தின் தேக சௌக்கியத்திற்குப் பொறுப்பாளியல்லரானாலும், கிராம வாசிகள் வருவித்துக் கொள்ளக்கூடிய வியாதிகளைத் தடுக்க முயற்சி செய்யும் பாத்தியதை அவருக்கு உண்டு. கைராசிக்காரர் என்ற அக்கிராமவாசி களின் பட்டம் அவருடைய வைத்திய கௌர வத்திற்குப் பின்னொளியாக இருந்துவந்தது.

அவருடைய வைத்தியம் தெரிந்த வியா திகளுக்கு ராஜபாதை; அவருக்குச் சிறிது சந்தே கம் தோன்றிவிட்டால் போதும், சாதாரணமான தானாலும் வியாதியஸ்தனை நூறு சதவிகிதம் பயமுட்டையுடன் வண்டி கட்டி, ஜில்லா ஆஸ் பத்திரிக்கு அனுப்பி விடுவார்.

கம்பௌண்டர் வெங்கடசாமி நாயுடு அப் படியில்லை. அவருடைய ஞானம் இரண்டு களஞ்சியங்களில் இருந்தது. ஒன்று, யூனியன் ஜாக் கொடி போட்ட – டாக்டர் பிள்ளையவர்க ளின் கைக்குள் அடங்கிய – சீமைச் சிகிச்சை; இன்னொன்று எண்ணற்ற ஓலைச் சுவடிகளிலி ருந்து திரட்டப்பட்ட மூலிகை சாஸ்திரம். வியா தியஸ்தனைக் குணப்படுத்துவதைவிட, குறிப் பிட்ட முறையின் தன்மையைப் பரிசீலனை செய் வதில் நெஞ்சழுத்தமுடையவர். ஆயுள்வேத சாஸ்திரத்தில் ஏற்பட்ட அபாரப் பிரேமையின் விளைவே அவருடைய இந்த நெஞ்சழுத்தத்திற் குக் காரணம் என்று சொல்ல வேண்டும்.

முருக்கம்பட்டி ஆஸ்பத்திரியில் பெரும் பான்மையான நாட்களில், குழந்தைகளுக்குப் பேதி மருந்து அல்லது மலச்சிக்கலால் ஏற்பட்ட காய்ச்சலுக்கு மருந்து, இவை தயாரிப்பதிலேயே காலம் கழிந்து விடும். அதனால் பிணமறுக்கும் கிடங்கின் பூட்டு துருப்பிடித்துச் சிக்கிக் கிடப்ப தில் ஆச்சரியமில்லை.

கிடங்கு, ஆஸ்பத்திரிக் காம்பவுண்டின் கீழ்க்கோடி மூலையில் இருக்கிறது. அன்று ராத் திரி பத்து மணி சுமாருக்கு ஆஸ்பத்திரித் தோட் டியான ராக்கன் வந்து எசமானிடம் கோயிலூரி லிருந்து பிணம் ஒன்று வந்திருப்பதாகச் செய்தி அறிவித்து, சாவியை வாங்கிக்கொண்டு போய்த் திறக்கக் கஷ்டப்பட்டான். முடியாமற்போகவே பூட்டுச் சிக்கெடுக்க டாக்டர் அம்மாளிடம் எண் ணெய் வேறு வாங்கிச்செல்ல வேண்டியதாக இருந்தது.

கோயிலூர் கிராம முன்சிப், அந்த வட்டா ரத்தில் ரவுண்டு வரும் ஏட்டு கந்தசாமி பிள்ளை – எல்லாரும் அந்தக் கேஸை எடுத்து வந்திருந் தார்கள். கேஸ், கோயிலூர்ப் பள்ளனுடைய பிரே தம். அவர்கள் சொன்ன விபரந்தான் விசித்திர மாக இருந்தது; அது வைத்திய சாஸ்திரத்துக்கு அதீதமானது.

ரத்தக் காட்டேரி அடித்துவிட்டதால், அந்தப் பள்ளன் மாண்டு போனதாகக் கூறப்படுகிறது.

இ.பி.கோ. வில் பேயடிப்பதற்குத் தனிப் பிரிவு இல்லை என்பதைத் தெரிந்துகொண்டிருந் தும், ஏட்டுப்பிள்ளைகூட வெட்டியான் கூற்றை நம்பி ஆமோதிக்கிறார்.

டாக்டர் வீரபத்திர பிள்ளைக்குப் பிரேத பரிசோதனையெல்லாம் வைத்தியக் கலாசாலை

யில் முதல் இரண்டு வருஷங்களில் கற்றுக்கொள்வதற்காக அநாதைப் பிரேதங்களை அறுத்துப் பார்த்ததோடு முடிவடைந்து விட்டது. பட்டிக்குள் சரணாகதியடைந்த பிறகு அவருக்கு இதுவரை பிரேத பரிசோதனை உத்தியோகம் ஏற்பட்டது கிடையாது.

அப்படிப்பட்டவருக்கு இதுமாதிரி விதிவிலக்கான ஒருகேஸ் சம்பவித்து ஊர்க்காரர்கள் பொதுப்பகையில் செய்த குற்றத்தை மறைப்பதற்குச் செய்யப்படும் ஒரு முட்டாள் தனமான முயற்சியோ என்று நினைத்தார்.

கம்பௌண்டர் நாயுடுவுக்கு ஆள் அனுப்பிவிட்டு 'யாருடா அது?' என்ற அதட்டலுடன் பாதக்குறடு சரல்கற்களில் கிரீச்சிட அவர் பிரேதக் கிடங்குக்குச் சென்றார்.

இவரைக் கண்டதும் ஏட்டு கந்தசாமி பிள்ளை போலீஸ் ஸலாம் செய்து, தமது கேஸ் புஸ்தகத்தை நீட்டிக் கையெழுத்து வாங்கிக் கொண்டு விலகி நின்றார். என்ன 'கந்தசாமி பிள்ளை, பய கதை விடரானே! 'என்று சிரித்தார் டாக்டர்.

"பேய் பிசாசு இல்லை என்று சொல்ல முடியுமா?" என்றார் கந்தசாமிபிள்ளை.

"பயந்தான் பேய். ரிப்போர்ட்லெ பேயடிச்சதுன்னு எழுதி வையாதியும், சிரிச்சுத் துப்பப்போறான்!" என்றார் டாக்டர்.

"நீங்கள்தான் முகத்தைப் பாருங்களேன்! அப்பந்தெரியும்-ஏலே வெட்டியான். அந்தச் சாக்கெ விலக்கடா!" என்று உத்தரவு போட்டார் கந்தசாமி பிள்ளை.

டாக்டர், கையில் அரிக்கன் விளக்கை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, குனிந்து பிரேதத்தைப் பார்த்தார்.

கண் பிதுங்கி வெளியே தள்ளிக்கொண்டிருந்தது. சொல்ல முடியாத பயத்தில் முகத்தில் வார்ப்பு எடுத்த மாதிரி அவ்வளவு கோரம்! கிட்டிப்போன பற்களுக்கிடையில் நாக்கு வெளியே தள்ளிக் கிடந்தது. பல் நாக்கில் பதிந்து விறைத்துக் கொண்டதால் வாயை அகற்றிக்கூட நாக்கை உள்ளே தள்ள முடியாது.

'சாக்கை அப்புறம் எடுத்தெறி' என்றார் டாக்டர்.

பிரேதம் ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்தது. முதுகில் பலத்த அறை விழுந்ததால் அதைத் தேக்குவதற்காக உடம்பை வளைத்த பாவனையில் வளைந்து விறைப்பேறிக் கிடந்தது. கை விரல்களும் வக்கிரமாக முறுகிக் கிடந்தன.

"சரி, உள்ளே எடுத்துக்கொண்டு போய் மேஜையிலே கெடத்துங்கடா!" என்று சொல்லி நிமிர்ந்தார் வைத்தியர்.

"உடம்பில் கோறை ஒன்றையும் காணவில்லை. ஆனால் அடிக்குக் குனிந்த மாதிரிக் கிடக்கிறது" என்று ஏட்டைப் பார்த்தபடியே கூறினார்.

அச்சமயம் இருட்டில் ஓர் உருவம் தெரிந்தது. 'அதாரது?' என்ற குரலுக்கு "நான்தான் நாயுடு" என்று சொல்லிக்கொண்டே கம்பௌண்டர் அருகில் வந்தார்.

"பேயடிச்ச கேஸ்கூட நம்ம ஆஸ்பத்திரிக்கு வருதுவே என்று சிரித்தார் டாக்டர் வீரபத்திர பிள்ளை.

"பேயா, அடிச்சா சாகத்தான்! இரண்டு மூன்று நாளாக இந்தப் பக்கம் ஒரு ரத்தக் காட்டேரி தெரிகெட்டுப்போய் அலையிது. அதாத்தானிருக்கும்!" என்றார் நாயுடு.

"நீரும் பேயை நம்புறீரா-உருப்பட்டாப்லேதான்!"

என்று சொல்லி டாக்டர், "ஏலே இன்னுமா – எத்திரி நேரம் சவத்தெ இளுத்துக் கெடத்த?" என்று அதட்டினார்.

"வே, கந்தசாமி பிள்ளை, நம்ம தோட்டி பாத்துக்கிடுவான். நீங்க வேணும்னா ஆஸ்பத்திரி வெராண்டாவுலே படுத்துக்கிடுங்க. காலையிலே வேலையைச் சுருக்கா முடிச்சிடுவோம்" என்று சொல்லிக்கொண்டே ஆஸ்பத்திரிக் காம்பவுண்டுக்கு எதிரில் உள்ள தமது வீட்டிற்குப் புறப்பட்டார்.

“ஸார், ஒரு நிமிசம், நான் ஒரு பார்வை பார்த்துப்புட்டு வந்திருதேன்!” என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார் கம்பௌண்டர் நாயுடு.

டாக்டர் சிறிது தூரம் தள்ளிச் சென்று நின்றார்.

உள்ளே சென்ற கம்பௌண்டர் நாயுடு சிறிது நேரத்தில் விறைக்க விறைக்க ஓடிவந்தார்.

“வெட்டியான் சொல்லுறதில் அணுவளவு சந்தேகமில்லெ; ரத்தக் காட்டேரிதான்!” என்றார் நாயுடு.

“உமக்கும் என்ன பைத்தியமா? வேறெ வேலெ இருந்தாப் போய்ப்பாரும்” என்று அதட்டினார் டாக்டர்.

“இப்பவே வேணும்னா அறுத்துப் பாருங்க! நான் சொல்லுறது சரியா தப்பா என்று தெரியும்” என்றார் நாயுடு.

“பார்க்க வேண்டியது உமது மூளைக்குத் தான் வைத்தியம்!” என்று சொல்லிக்கொண்டே மேல்துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, கைகளைத் தோளுக்குமேல் உயர்த்தி சுடக்கு முறித்துக் கொட்டாவி விட்டார் டாக்டர்.

“நீங்க எங்ககூட ஷெட்டுக்குள் வாருங்க காண்பிக்கிறேன்!” என்று தமது கட்சியை நிரூபிக்க அவசரப்பட்டார் கம்பௌண்டர்.

“என்னதான் சொல்லுமே!”

“நீங்க வாருங்க, ஸார்!” என்று ஷெட்டுக்குள் நுழைந்து, பிணத்தின் மீது கிடந்த சாக்கை அகற்றினார் கம்பௌண்டர்.

“டேய் தோட்டி! விளக்கைக் கொஞ்சம் ஒசத்திப் பிடி” என்று சொல்லி, மடியிலிருந்து சூரிக்கத்தி ஒன்றை எடுத்தார்.

அவர் என்னதான் காட்டப் போகிறார் என்பதைப் பார்க்க ஷெட் வாசலில் நின்றுகொண்டிருந்த டாக்டர், “என்னவே, வேலை” என்று சொல்லுமுன் பிணத்தின் கையில் கத்தியைக் குத்திக் கிழித்து, மாங்காயைப் பிளந்து காட்டுவதுபோல் காயத்தை விரித்துப் பிடித்துக் காண்பித்து, ‘இதில் ஒரு சொட்டு ரத்தம் இருக்கிறதா பாருங்கள்’ என்றார்.

‘‘ரத்தம் இருந்தால் பிணமானபின் வடிவதை எங்கே கண்டீர்’’ என்று சொல்லிக் கொண்டே நெருங்கினார் டாக்டர்.

“ரத்தம் வடியாது, உறைந்தாவது இருக்க வேண்டுமே எங்கே பாருங்கள்?” என்றார் நாயுடு.

டாக்டர் குனிந்து பரிசோதித்துப் பார்த்தார். ரத்தத்தை வடிகட்டிப் பிழிந்தெடுத்த சதைபோலக் கிடந்தது பிணம்.

டாக்டர் வேறு ஓர் இடத்தில் பரிசோதிக்கும்படி கூறினார். அங்கும் அப்படியே இருந்தது. டாக்டருக்குப் புல்லரித்தது.

“அப்புறம்” என்றார். அவருடைய நாக்கு மேல்வாயில் ஒட்டிக்கொண்டது.

“வாருங்க. போவோம்” என்று வெளியே வந்த கம்பௌண்டர், “இவன் ரத்தம் எங்கே இருக்கிறது என்று பார்க்க வேண்டுமா?” என்றார். “கோயிலூர்க் கணியான் செத்துப் போனானே அவனைப் பொதைக்கத்தானே செய்தார்கள்?” என்று கேட்டார் தோட்டியிடம்.

“ஆமாஞ் சாமி அங்கனெதான் இவனும் மாட்டிக்கிட்டான்” என்றான் தோட்டி ராக்கன்.

“எப்படா நடந்தது?”

“சாயங்காலம் சாமி”

“வருகிறீர்களா, போவோம்?” என்றார் கம்பௌண்டர்

“அவ்வளவு நிச்சயமா உமக்கு? அப்படியானாப் போவோம்” என்றார் டாக்டர்.

‘‘ஏட்டுப்பிள்ளையையும் கூட்டிக் கொள்ளுவோம், ஏலே ராக்கா, மம்பட்டியை எடுத்துக்கிட்டுக் கூட வா!”

‘‘நான் வரமாட்டேன் சாமி, எனக்கு புள்ளை குட்டியில்லே” என்றான் ராக்கன்

‘‘நாங்க இருக்கறப்ப என்னடா பயம்? சும்மா வா, ஒண்ணும் நடக்காது” என்று தேற்றினார் கம்பௌண்டர்.

இந்தப் பரிசோதனைக் கோஷ்டி கோயிலூர் பள்ளர் சுடுகாட்டை அடையும்போது மணி பன்னிரண்டு.

வானத்திலே துளி மேகங்ககூடக் கிடையாது. நிலவொளியும் இல்லை. வெறும் நட்சத்திரப் பிரகாசம்தான்.

சுடுகாடு ஆற்றங்கரையிலிருந்தது. அது ஒரு வெட்டவெளி. நாலைந்து பர்லாங்குக்கப்புறந்தான் அந்தப் பகுதியில் மரம் என்ற பேருக்கு ஒன்றிரண்டு பனை முளைத்துக் கிடந்தது.

“எங்கடா அவனைப் பொதெச்சாங்க?” என்று அதட்டினார் டாக்டர். தம்மை இழுத்தடிக்கிறானே அந்தக் கம்பௌண்டர் என்று அவருக்கு நினைப்பு.

“அதோ, அந்தக் குத்துக்கல் தெரியுதே அதுதான் சாமி” என்றான் ராக்கன். அவன் சொல்லி வாய் மூடவில்லை...

நாயின் ஊளை போல ஆரம்பித்த ஒரு சப்தம் கணநேரத்துக்கு நேரம் சுருதி கூடி, ஆந்தையின் அலறலாக மாறி, வெறும் பேய்ச் சிரிப்பாக வானமுகட்டைக் கிழித்தது.

கடகடவென்று விக்கி விக்கிச் சிரிப்பது போன்ற அலறல் ஒரு கணம் வானத்தையே நிறைத்தது.

அடுத்த கணம் அமைதி.

அதே பேய் அமைதி.

நடந்து கொண்டிருந்தவர்கள் யாவரும் தரையுடன் தரையிட்டது மாதிரி கல்லாய் உறைந்து நின்றனர்.

“சாமி, நான் வரமாட்டேன் பேய்!” என்று ஓட்டம் பிடித்தான் ராக்கன்

மண்வெட்டி, ஓடிய வேகத்தில் அவன் கைவிட்டு நழுவியது. அதை எடுத்துக்கொள்ள அவன் தாமதிக்கவில்லை.

“நாய் ஊளையிட்ட மாதிரி இருந்துதல்ல” என்றார் ஏட்டுப்பிள்ளை.

‘‘சுடுகாட்டில் நாய்க்கா பஞ்சம், அது நாயில்லை” என்றார் கம்பௌண்டர்.

மூவரும் அந்தக் கணியானைப் புதைத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

கம்பௌண்டர் நாயுடு விளக்கை உயர்த்திப் பிடித்துக்கொள்ள, ஏட்டுப்பிள்ளை தைரியமாக வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு மண்வெட்டியால் தோண்ட ஆரம்பித்தார்.

ஆற்றருகில் உள்ள இடந்தானே, வேலை சுளுவாக நடந்தது.

“அதோ வெள்ளையா என்னமோ தெரிகிறது” என்றார் கம்பௌண்டருடன் ஒண்டிக்கொண்டிருந்த டாக்டர்.

ஏட்டுப்பிள்ளை மண்வெட்டியைக் குழிக்கு வெளியில் எறிந்துவிட்டு, கைகளால் மண்ணைப் பரசி எடுக்க ஆரம்பித்தார். கம்பௌண்டரும் கையிலிருந்த விளக்கை டாக்டரிடம் கொடுத்துவிட்டு உள்ளே இறங்கி, துணியின் முனையைப் பிடித்து இழுத்துத் தூக்கவே பிரேதம் தென்பட்டது.

டாக்டர் குழிக்குள் விளக்கைப் பிடித்துக்கொண்டு குனிந்து பார்த்தார்.

பிரேதம் கைக்கட்டு, கால்விரல் கட்டு, வாய்க் கட்டுகளுடன் மலத்திக் கிடத்தப்பட்டிருந்தது.

புதைத்து நான்கு நாட்களாகியும் நெற்றியிலிருந்த சந்தனமும் குங்குமும் அழியவில்லை. கழுத்தில் கிடந்த மாலை வாடவில்லை. பிரேதம்போல் கட்டப்பட்டு ஒருவன் படுத்துத் தூங்குவது போலவே தென்பட்டது.

“அவன் எமை ஆடுது” என்று அலறிக்கொண்டே விளக்கை நழுவவிட்டார் டாக்டர்.

நல்ல காலம், கம்பௌண்டர் அதை ஏந்திக்கொண்டார்.

பிரேதத்தின் வலது இமை ஆடியது. யாவரும் அதையே பார்த்து நின்றார்கள்.

பிணம் எழுந்து உட்கார்ந்து பேசும் என்று எதிர்பார்ப்பது போலிருந்தது அவர்கள் பார்வை.

வலது கண் இமைகள் மெதுவாக

அசைந்தன. உள்ளிருந்து சிரமப்பட்டு ஒரு கரு வண்டு வெளியே வந்தது. வெளிச்சத்தைக் கண்டு திகைத்தது போலத் தள்ளாடியது. பிறகு சிறகை விரித்து உயரப் பறந்து சென்றது.

“வண்டுகளைப் போல அது ரீங்காரமிட வில்லை. பார்த்தீரா?” என்றார் நாயுடு.

வண்டு போனதையே பின்பற்றிய கண்கள் அதை இருளில் இழந்தன.

“இதோ பாருங்கள்” என்று பிரேதத்தின் வலது கரத்தைக் கத்தியால் கிழித்துக் காயத்தை விரித்துப் பிடித்தார் நாயுடு.

புது ரத்தம் குபுகுபு என்று பொங்கி அவர் விரல்களை நனைத்தது.

மூவரும் ஆற்றில் குளித்துக்கொண்டிருந் தார்கள்.

‘‘ரிப்போர்ட் எப்படி எழுத?’’ என்று கைகளை மணலால் தேய்த்துக் கொண்டே கேட் டார் ஏட்டுப்பிள்ளை. தன் கையில் ரத்தம் பட்ட துபோல அவ்வளவு பிரமை.

“பயத்தால் மரணம் என்று எளுதிப்புடும்” என்றார் கம்பௌண்டர்

“நாயுடு, இது எப்படித் தெரிந்தது?” என்றார் டாக்டர்.

“அவன் ஜாதகத்தைப் பார்த்திருக்கிறேன். அவனுக்குச் செவ்வாய் தோஷம். அந்த ஜாதக மெல்லாம் ரத்தக் காட்டேரிதான்” என்றார் கம் பௌண்டர்.

**– புதுமைப்பித்தன்**

- பாடப்பகுதியைப் போன்று மூடநம்பிக்கை கள் குறித்த நாட்டுப்புறக் கதைகளை எழு துங்கள்.

- ‘பேயடிச்ச கேஸ்கூட நம்ம ஆஸ்பத்தி ரிக்கு வருதுவே!”என்று சிரித்தார் டாக்டர் வீரபத்திர பிள்ளை.

  ‘‘பேயா, அடிச்சா சாகத்தான்! இரண்டு மூன்று நாளாக இந்தப் பக்கம் ஒரு ரத்தக் காட்டேரி தெரிகெட்டுப்போய் அலையிது. அதாத்தானிருக்கும் என்றார்!” நாயுடு.

  ‘‘நீரும் பேயை நம்புறீரா – உருப்பட் டாப்லே தான்!”

  “டாக்டர், ஏலே இன்னுமா – எத்தினி நேரம், சவத்தெ இளுத்துக் கெடத்த?’’ என்று அதட்டினார்.

  ‘‘வே கந்தசாமி பிள்ளை, – நீங்க வேணும்னா ஆஸ்பத்திரி வெராண்டா விலே படுத்துக்கிடுங்க–காலையிலே வேலையைச் சுருக்கா முடிச்சுடுவோம்” என்று சொல்லிக் கொண்டே ஆஸ்பத்தி ரிக் காம்பவுண்டுக்கு எதிரில் உள்ள தமது வீட்டிற்குப் புறப்பட்டான்.

  இக்கதைப்பகுதியை இலக்கிய நடையில் மாற்றி எழுதுங்கள்.

- கதையின் மையக்கருத்தை அறிவியல் முறையில் அணுகி விமர்சனக் குறிப்பு தயார் செய்க.

# நம்பிக்கைகள்

## மூடநம்பிக்கை

சமுதாயத்திற்கு
ஆயிரமாயிரம் கண்கள்!

பெரும்பாலும் அவை
மூழ்கியிருக்கும்
முத்திரையிடப்பட்ட
நித்திரைக்குள்!

எப்போதாவது அதிசயமாக
உறக்கம் கலைந்து
அவை
உற்றுப் பார்த்தால்
எதிரே இருக்கும்
இருட்டறை!

சமுதாயத்திற்கு
ஆயிரமாயிரம் கண்கள்!

அறியார் எவருமில்லை

அறியாமையால் பிறக்கும்
மூடநம்பிக்கை பற்றிச்
சொன்னால்

முதலில் வரும் நினைவுக்கு
உரியார் யார் என்று
அறியார் எவருமில்லை

உலகம்
தெரியார் கூடத்
தெரிந்திருப்பார்
'பெரியார்' தான் - அவர்
பெயரென்று.

இரு கை மனிதர்கள்
எத்தனை பேர் சேர்ந்தாலும்
இமயத் தேரை
இழுக்க முடியுமா?
இடரெனும் மலையைக்
கடக்க முடியுமா?

இரு கை மனிதரால்
இயலாது - ஆனால்
மூன்று கை மனிதரால்
முடியும்

அவர்களுக்கு
வானமும் வசப்படும்
கடலும் தனது
கதவு திறந்து
முத்தெடுத்துக் கொடுக்கும்
முத்தமும் கொடுக்கும்

இரு கை மனிதருக்கு
இணையற்ற-அந்த
மூன்றாம் கை எது?
நானறிந்த வரை
அக் கை
நம்பிக்கைதான்
அந்த மூன்றாவது கை
முளைக்காமல் தடுப்பதுடன்
ஏற்கனவே இருக்கும்

இரண்டு கைகளையும்
முடமாக்குவ தல்லவோ
மூடநம்பிக்கை?

மதயானை குறுக்கிட்டால்
நடுங்காத சூரர்களும்
மதிற்பூனை குறுக்கிட்டால்
நடுங்குகிறார்...

பல்லவன் வந்து, மேல்
விழுந்தாலும் பதறாதார்
பல்லி விழுந்தால்
பதறுகிறார்...

அப சகுனம் சுப சகுனம்
பார்க்கின்றார்...
கட்டாய நெருக்கடிகள்
தோன்றும் போது
சகுனத்தைப் பற்றிக்
கவலைப் படாமலும்
காரியங்கள் நடத்துகிறார்.
அப்படியானால்
அப சகுனம் - சுப சகுனம்
இரண்டுக்குமிடையே
ஊடாடும் சகுனம் எது?
உப சகுனமோ?

நம்பிக்கைத் தொழிலாளி
கோபுரத்தைக் கட்டுகிறான்
மூடநம்பிக்கையெனும்
முட்டாளோ
அதைத் தகர்க்க
ரகசியமாகவும்
இலவசமாகவும்
வெடிமருந்துப் பெட்டிகளை
விநியோகம் செய்கின்றான்.

சதிசெய்து கொண்டிருக்கும்
சமுதாய சக்திகள்
அகப்பட்டுக் கொள்ளும்போது
விதியின் சாட்சியத்தால்
விடுதலை பெறுகின்றன.
நம்பிக்கை
நமக்குச்
சிறகு முளைக்க வைக்கிறது

மூடநம்பிக்கையோ
முளைத்த சிறகுகளை
முறித்துப் போட்டுவிட்டு
நம் முதுகிலேயே
அதைச்
சுமக்கவும் வைக்கிற
சுட்டித்தனம் செய்கிறது

நம்பிக்கை
கனவுகளைக் கூட - நம்
கைவசப் படுத்துகிறது
மூடநம்பிக்கையோ
நம் கைகளைக் கூட
வெறும்
கனவுகளென்று
உதறி விடுமாறு
உபதேசிக்கிறது.

**- மு.மேத்தா**
**(முகத்துக்கு முகம்)**

- பாடல்கருத்துகளின் அடிப்படையில் முத்திரை வாக்கியங்கள் எழுதுக.

# விழிப்புணர்வு

**திரை இசைப் பாடல்**

வேப்பமர உச்சியிலே நின்று
பேயொன்று ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகள்
வேடிக்கையாகக் கூட
நம்பிவிடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே - நீ
வெம்பி விடாதே.

**- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**
**(அரசிளங்குமரி)**

**பண்படா காலத்திலே**

அடுத்த உலகம் என் றொன்றுமே இல்லை
- கோள்
அடுத்த தல்லால் வேறுலகமும் இல்லை
படுத்தும் நரகமும் சொர்க்கமும் இல்லை
- மக்கள்
பண்படா காலத்தில் புகுந்த ஓர் தொல்லை

**- லோகாயதச் சித்தர்**

- 'மக்கள் நல்வாழ்விற்கு அறிவியல் சார்ந்த நம்பிக்கையே ஆக்கம் தரும்!' எனும் தலைப்பில் வழக்காடு மன்றம் நிகழ்த்துங்கள்.
- இதுபோன்ற நம்பிக்கைகளுக்கு எதிரான திரைப்பட, நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுக்க.

# கண்மூடி வழக்கங்கள்

**"யானையின் பலம் தும்பிக்கையிலே**
**மனிதரின் பலம் நம்பிக்கையிலே"**

என்பது தமிழ்நாட்டில் வழங்கி வரும் பழமொழி. மனிதர் யாவரும் நம்பிக்கையோடு அதுவும் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும்; அப்படி வாழ்ந்தால் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வெற்றிபெறலாம்.

நம்பிக்கை என்றால் என்ன? எதனையும் காரணகாரியத்தோடு ஆராய்ந்து ஏற்றுக் கொள்வது, பின்பற்றுவது நம்பிக்கை. அது அறிவுக்கு உகந்தது. ஆனால், எதனையும் ஆராயாமல் உணர்வு வயப்பட்டு, கண்மூடித் தனமாக ஏற்றுக்கொள்வதும் பின்பற்றுவதும் மூட நம்பிக்கை.

இத்தகைய மூடநம்பிக்கைகள் படித்தவர், பாமரர் என்ற பாகுபாடு இல்லாமல் நாட்டு மக்களிடம் நிலவி வருகின்றன. மூட நம்பிக்கைகளால் தனிமனித வளர்ச்சி குன்றுகிறது. சமுதாய வளர்ச்சி தடைப்படுகிறது. மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும் என்னும் பழமொழிக்கு

ஏற்ப, இது, எங்கள் பழக்கவழக்கம் என்று சொல்லி, மூட நம்பிக்கைகளைத் தாங்களும் பின் பற்றித் தங்கள் வருங்கால சந்ததிகளையும் நம்பவும் பின்பற்றவும் செய்துவிடுகின்றனர்.

இத்தகைய மூட நம்பிக்கைகளை கடவுள் பக்தி, உணவுப்பழக்கம், திருமணம், குடும்ப உறவுநிலை, மகப்பேறு, தொழில், பயணம் என வாழ்க்கையின் பல நிலைகளிலும் சிலர் பின்பற்றி வருகின்றனர்.

**மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்**

**கொடுக்கிற தெய்வம் கூரையைப்**
**பிய்த்துக் கொண்டு கொடுக்கும்**

**எல்லாம் விதிப்படியே நடக்கும்**

இவை போல்வன பக்தியின் அடிப்படையில் ஏற் படும் மூடநம்பிக்கைகள்.

**மண்ணைத் தின்றாலும் மறைத்துத் தின்**

**இராப்பொழுதில் தயிர், மோர் கொடுக்கக் கூடா**

**இரவு நேரத்தில் கறிக் குழம்பு கொண்டு**
**போனால் பேய், பிசாசு துரத்தும்**

இவை போல்வன, உணவு மற்றும் உணவுப் பழக்கவழக்கத்தில் உள்ள மூட நம்பிக்கைகள்.

**தையில் தலைச்சாண் பிள்ளைக்குத் தாலி கட்டக் கூடாது**

**உத்தரத் தாலி உறியிலே**

**தலைப்பிள்ளைக்கும் தலைப் பெண்ணுக்கும்**
**திருமணம் செய்யக்கூடாது**

என்பன போன்றவை திருமணம் பற்றிய மூட நம்பிக்கைகள்

**சித்திரை அப்பன் தெருவிலே அல்லது எருவிலே**

**ஐந்தாவது பையன் பஞ்சாப்பறத்திடுவான் நாலாவது**
**பெண்ணு நடைக்கல்லையும் பெயர்த்திடுவாள்**

என்பன போன்றவை மகப்பேறு பற்றிய மூட நம்பிக்கைகள்.

இவைபோன்ற எண்ணற்ற மூடப்பழக்க வழக்கங்கள் மனித முயற்சியைக் கெடுக்கின்றன. சமுதாய வளர்ச்சியைத் தடை செய்கின்றன. ஒற்றுமைக்கு உலைவைத்து வேற்றுமையை வளர்க்கின்றன; வெறியைத் தூண்டுகின்றன; அழிவைத் தருகின்றன.

மக்களிடம் காணப்படும் இந்த மூடப்பழக்க வழக்கங்களைச் சுட்டிக்காட்டி, அவர்கள் அறி வுத்தெளிவு பெறப் பாடுபட்ட சான்றோர் பலர். அவர்களுள் இராமலிங்கஅடிகள், நாராயணகுரு, பெரியார் ஈ.வெ.ரா. மகாகவிபாரதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

**மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்!**
**கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக வேண்டும்!**

என்பன போன்ற அறிவுரைகளை இராமலிங்க அடிகள் தம் பாடல்களில் கூறி, மூட நம்பிக்கை களிலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என வலி யுறுத்தினார்.

**சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**
**தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்**

இவ்வாறு பல பாடல்களின் வழி, சாதி-மதம் - பேய் பிசாசு - மற்றும் ஐந்து தலைப்பாம்பு, ஆறுதலைப்பாம்பு போன்ற மூடநம்பிக்கை களைச் சாடுகிறார். மக்களிடம் நல்லறிவைச் சூட்டுகிறார் பாரதி.

பாரதி வழி வந்த புரட்சிக்கவிஞர் பாரதி தாசன் மூட நம்பிக்கைகள் குழந்தைப் பருவத்தி லேயே களையப்பட வேண்டும் எனக் கருதுகி றார். ஆதலால், தாலாட்டுப் பாடலில், அதுவும் பெண் குழந்தைத் தாலாட்டில் பின்வருமாறு பாடு கிறார்; மூட நம்பிக்கைகளைச் சாடுகிறார்.

**மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற**
**காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே**
**வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!**

பாரதியார், பாரதிதாசன் ஆகியோரைப் பின்பற் றிச் சமுதாயச் சீர்கேட்டுக் கருத்துகளைத் திரைப் படப் பாடல்கள் வாயிலாகப் பாடிய கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்,

**சின்னபயலே சின்னப்பயலே**
**சேதி கேளடா**
**நான் சொல்லப்போற வார்த்தையை நல்லா**
**எண்ணிப் பாரடா - நீ**
**எண்ணிப் பாரடா - (சின்னப்)**

**ஆளும் வளரணும் அறிவும் வளரணும்**
**அதுதாண்டா வளர்ச்சி**
**ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே - நீ**
**தரும் மகிழ்ச்சி**

**தனியுடைமைக் கொடுமைகள் தீரத்**
**தொண்டு செய்யடா - நீ**
**தொண்டு செய்யடா**
**தானா எல்லாம் மாறும் என்பது**
**பழைய பொய்யடா - எல்லாம்**
**பழைய பொய்யடா (சின்னப்)**

என மக்களை விழிப்புணர்வு பெறச் செய்கிறார்.

இத்தகைய கவிஞர்கள், சான்றோர்கள் கருத்தைச் செவிமடுப்போம்; சிந்தையில் இருத்துவோம்; விழிப்புணர்வு கொள்வோம்; மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபடுவோம்.

**- முனைவர் இ. கோமதிநாயகம்**

- நம்பிக்கைகள் தொடர்பாகப் பத்திரிகைகள், இதழ்கள் இவற்றில் இடம்பெறும் செய்திகளைச் சேகரிக்க.

**சோதிடம்**

குருவி, கழுகுகளிடம் சோதிடம் பார்ப்பது என்பதெல்லாம் மிகவும் மடத்தனமான காரியமாகும். சாதகம், பொருத்தம், நல்ல நேரம் என்று பார்த்து நம்முடைய வசதியைக் கெடுத்துக் கொள்கிறோம். நல்ல நேரம், இராகு காலம், எமகண்டம் என்று பார்க்கிறார்களே, இவர்களுக்குக் கோர்ட்டில் ஒரு கேஸ் விசாரணை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அங்கு நல்ல கொழுத்த, இராகு காலம் என்று சொல்லப்படும் நோக்கில் அவன் இராமசாமி இராமசாமி என்று கூப்பிட்டால் இவன் இப்போது இராகுகாலம் நான் வர மாட்டேன் என்று கூறுவானா? துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு குடு குடு என்று எங்கே சீக்கிரம் போகாவிட்டால் வழக்கைத் தள்ளிவிடப் போகிறானோ என்று ஓடிப் போய் வந்தேன் என்றுதானே கூறுவான்? அப்பொழுது எங்கே போயிற்று இராகுகாலம்?

எமகண்டத்துலே இரயிலும், பஸ்ஸும் புறப்படுகிறது. கொஞ்சம் இரு, இப்பொழுது இராகுகாலம் என்று கூறினால் அது நிற்குமா? அதில்தானே ஏறிச் செல்கிறான். இதையெல்லாம் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

**(தந்தை பெரியார் சிந்தனைக் களஞ்சியம்)**

# பகுத்தறிவு

## பகுத்தறியும் பண்பாடு

**முகவுரை**

ஒருநாள், ரோகிணி செயற்கைக்கோளை ஸ்ரீஹரிக்கோட்டையிலிருந்து விண்வெளியில் அனுப்புவதைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது கல்லூரியில் முதலாண்டு படிக்கும் என் மூன்றாவது மகன். இது விஞ்ஞானத்தின் சாதனை; இதை நான் கண்ணால் பார்க்கிறேன். அதனால் நம்புகிறேன். "கடவுளை நான் இதுபோல் பார்க்க முடியாது பிறகு எப்படி கடவுள் இருக்கிறார் என்பதை நம்புவது" என்று தொடர்ந்து கேட்டான். உடனே ஆறாவது வகுப்பில் படிக்கும் அவன் தம்பி ''ஒரு சிறிய விதையிலிருந்து தானே பல கிளைகள், பல நிறமுள்ள இலைகள், பலவிதமணம் வீசும் பூக்கள், சுவையுள்ள பழங்கள் எல்லாம் உருவாகின்றன? அந்த விதையின் எந்தப்பகுதியில் நிறம் இருக்கிறது, மணம் இருக்கிறது, சுவை இருக்கிறது, பூ, பழம், காய் போன்றவை இருக்கின்றன என்று காட்டமுடியுமா? அதுபோலத்தான் கடவுளும்" என்றான். இவ்விரண்டில் எது அறிவியல் நோக்கு, எது மூடநம்பிக்கை என்று உங்களால் சொல்ல முடியுமா?

**பழக்க வழக்க அறிவியல்**

பண்டைக்காலத்தில் சமுதாய வாழ்வில் காணப்பட்ட பல நிகழ்ச்சிகளுக்குக் காரண காரிய விளக்கத்தைப் பெரியோர்கள் கூறவில்லை. ஆனால் அவற்றிற்குச் சில பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி, அடிப்படையான நம்பிக்கையை உண்டாக்கிவிட்டனர். ஐயப்பாடு ஏற்படும் நேரத்தில் நம்பிக்கை கைகொடுக் கின்றது. ஒவ்வொரு செயலிலும் ஒருவித நம்பிக்கை ஏற்பட்டவுடன் சிந்தனை ஓய் வெடுத்துக்கொள்கிறது. இப்படி பல நம்பிக் கைகள் உலகின் பல பகுதிகளிலும் நிலவு கின்றன. நாய் ஊளையிட்டால் அந்தப் பகுதியில் சாவு நிகழப்போகிறது என்று நம்பினார்கள். இன்று அறிவியல் ஆராய்ச்சியின் மூலம் நிலநடுக்கம், புயல், காற்று போன்ற நிகழ்ச்சிகளை மனிதரைவிட விலங்குகள் முன்னரே அறி கின்றன என்பதைக் கண்டுபிடித்துள்ளனர். வீட்டின் வாயிலில் சாணி தெளித்தல் நல்லது என்பது பழைய நம்பிக்கை. உருசியர்கள் சாணிக்குக் கதிரியக்கத்தைத் தடுக்கும் சக்தி உண்டென்பதைக் கண்டறிந்துள்ளனர். இருட்டில் உணவு உண்ணக் கூடாது என்று சொல்வது வழக்கம். நாம் சாப்பிடும் உணவில் ஏதாவது பூச்சிகள் விழுந்து அதனால் நச்சுத் தன்மை ஏற்பட்டுவிடும் என்பதே இதற்குக் காரணம். மாலையில் வீட்டின் பின்பக்கம் கதவைத் திறந்து வைத்தால் மூதேவி உள்ளே புகுந்து விடுவாள் என்பது பழமையான நம்பிக்கை. இருட்டில் நமக்குத் தெரியாமல் திருடர்கள் உள்ளே புகுந்து கொண்டு, பின்னிரவில் பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிடுவார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் அவ்வாறு கூறப்பட்டது.

**உளவியல் நம்பிக்கை**

பூசனையின் போது தேங்காய் உடைக்கும் போது அது சரிபாதியாக உடையாமல், பல துண்டுகளாக உடைந்தால், நினைத்த காரியம் நடக்காது என்பது நம்பிக்கை. சரிபாதி என்பது சம அளவு, சமநிலை என்பதைக் குறிக்கும், அதேபோல் நாம் நினைத்த காரியமும் சமநிலையில் முழுமைபெறும் என்று மனதில் நம்பிக்கை ஏற்படும். ஊக்கத்தை அளிக்கும் பல

துண்டுகளாகத் தேங்காய் உடைந்தால், நம் காரியமும் பல விதங்களில் பாதிக்கப்படும் என்று மனதில் கலக்கமுண்டாகும். ஏணியை எடுத்துச் செல்லும்போது முகத்திற்கு நேரே வைத்து எடுத்துச் செல்ல வேண்டும். தலைக்குமேல் நீளவாட்டில் எடுத்துச் செல்லக்கூடாது என்று தடுப்பர். இறந்தவரை எடுத்துச் செல்லும் பாடை ஏணிபோல் அமைப்புக் கொண்டது. அது தலைக்குமேல் நீள வாக்கில் எடுத்துச் செல்லப் படுவதாகும். ஆதலின் சாவின் அறிகுறியும் தீய சகுனமும் கருதியே அவ்வாறு தடுக்கப்பட்டது. இவை உளவியலை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகளாகும்.

### மூடநம்பிக்கையில் அறிவியல்

சாதாரணமாக நம் வீடுகளில் பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசினால், அவற்றில் சாணி கலந்த நீரை ஊற்றி ஒருநாள் முழுவதும் வைத்துவிட்டுப் பிறகு நன்றாகக் கழுவிப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். இது மற்றவர் கள் தொட்ட பாத்திரத்தைச் சுத்தம் செய்யும் நோக்கிலமைந்த ஒரு மூடநம்பிக்கையாகும். ஆனால் அறிவியலின்படி சாணிநீர் ஈயத்தில் விஷத்தன்மையை மாற்றும் சக்தி வாய்ந்ததாகும். சாணியிலுள்ள பொட்டாசியம் நைட்ரேட், ஈய நைட்ரேட்டாக மாறி நீரில் கலந்து பாத்திரத்தைச் சுத்தம் செய்கிறது. மூடநம்பிக்கையிலும் அறிவியல் பின்னணி உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகிறது இக்கருத்து.

### இயற்கை அறிவியல்

மெக்சிக்கோவிலுள்ள சிவப்பு இந்தி யர்கள் எந்தெந்தச் செடியின் பகுதி எந்தெந்த நோயைக் குணப்படுத்தும் என்று அறிந்திருக் கிறார்கள். இலைகளின் உருவ அமைப்பைக் கொண்டே அது எந்த நோய்க்கு நல்லது என்று கூறுவார்கள். ஊதாநிற, வெள்ளைநிறப் பூக்களைக் கொண்டது நித்யகல்யாணிச் செடி. இடுகாட்டில் இச்செடி ஏராளமாகக் காணப்படும். வீடுகளில் இதை நட்டு வளர்க்கக் கூடாது என்ற ஒரு தவறான நம்பிக்கை உண்டு. புற்றுநோய்க்கு இது சிறந்த மருந்து என்று செருமானியர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். தற்போது இந்தியாவில் இது அதிகமாகப் பயிரிடப்பட்டு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வீடுகளிலும் வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள். இயற்கையோடு தொடர்புற்று வாழும்போது அறிவியல் அறிவு ஏற்படும் என்பது உண்மையன்றோ?

### அறிவியல் மறுப்பு நம்பிக்கை

பலபழமையான நம்பிக்கைகளின் அடிப்படையில் புதிய அறிவியல் கண்டுபிடிப் புகளைப் பல விஞ்ஞானிகள் எதிர்த்துள்ளனர். கலிலியோ தொலைநோக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்தபோது அக்காலத்திலுள்ள பல அறிஞர்கள் அதைப் பார்க்கக்கூட மறுத்து விட்டார்கள். வானத்திலிருந்து வால்நட்சத் திரங்கள் பூமியில் விழுந்து கற்களாக மாறு கின்றன என்ற கருத்தை வேதியல் அறிஞரான ரவோஸியர் நம்பவில்லை. காற்று, இருவகை வாயுக்களால் ஆனது என்று இவர் கண்டு பிடித்தபோது, ஆன்டனிபாம் என்ற மற்றொரு விஞ்ஞானி ஏற்றுக்கொள்ளவில்லை. எடிசனின் கிராமபோன் கண்டுபிடிப்பினைப் போப்லாண்ட் என்ற பிரஞ்சு விஞ்ஞானி ஏற்க மறுத்துவிட்டார். தவளைகளின் கால்களிலுள்ள மின்அதிர் வினைக் கண்டுபிடித்த கால்வினி என்பவரை எல்லோரும் ‘தவளை நட்டுவனார்’ என்று கேலிசெய்தனர். மயக்கமருந்து கொடுத்து வலியின்றி அறுவைச் சிகிச்சை செய்ய முடியும் என்பதை அறுவைச் சிகிச்சை நிபுணரான மெகண்டி மறுத்துவிட்டதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய அறிவியல் மறுப்பு நம்பிக்கைகள் நாளடைவில் மறைந்துபோய் விடுகின்றன.

### அறிவியல் நம்பிக்கை

அந்தந்தக் காலத்தில் பழமையான நம்பிக்கைகளுக்கு ஏற்பப் புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருந்துள்ளது. ஆனால் இவற்றையே திரும்பத்திரும்பச் சோதனை செய்து, அவற்றின் விளைவு மனித சமூகத்திற்கு நன்மை அளிப்பதுதான் என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் அவை ஏற்றுக்

கொள்ளப்பட்டன. பகுத்தறிவின் பயனாக அமைந்த மாற்றம் இது. நம் ஒவ்வொருவரிடத்திலும் நம்பிக்கை, அவ நம்பிக்கை என்று இருவித சக்திகள் உள்ளன. மனிதனுடைய இயல்பே அவனுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அதை நம்புவதுதான். "எனக்கு என்ன வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் அதை எப்படி அடையவேண்டும் என்றுதான் தெரியவில்லை" என்பார் அறிஞர் கூடன்பர்க். "எனக்கு என்ன வேண்டும்" என்பதற்கும் "எப்படி அடைய வேண்டும்" என்பதற்கும் இடையில் நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை மனதில் தோன்றியவுடன், அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பலர் நிம்மதியடைந்து விடுகின்றனர். நம்பிக்கை வளர வளர, சிலர் "இலக்கை எப்படி அடைய முடியும்" என்பதைப் படிப்படியாகச் சிந்தித்துச் செயல்பட்டு இறுதியில் வெற்றி காண்கின்றனர். இவர்களே அறிவியல் விஞ்ஞானிகள்.

### அறிவியல் நோக்கு

நிறைந்த வாழ்வு வாழ்வதற்கு எந்த இனத்திற்கும் அடிப்படையாக வேண்டுவது அறிவியல் நோக்கு ஆகும். அந்த அறிவினால் ஏற்படும் இறுமாப்போ பொறுமை இன்மையோ அறிவியல் நோக்கு ஆகாது. பண்டைய பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் அறியாமை என்று அறவே ஒதுக்கிவிடுவதும் அறிவியல் நோக்கமாக அமையாது. அவை சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதா? என்பதை ஆய்ந்தறிய முயற்சி செய்ய வேண்டும். தனிமனிதனின் நம்பிக்கையைத் தளர்த்தக் கூடியதா என்பதைக் கண்டறிய வேண்டும். பிற்போக்குத்தனத்தில் விளைந்த மூடநம்பிக்கைகளைத் தள்ளிவிட வேண்டும். பயனுள்ள கருத்துகளைத் தயங்காது ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய பகுத்தறியும் பண்பாடே அறிவியல் நோக்கினை வளர்க்கும் நல்ல தொலை நோக்கையும் தளரா உறுதியையும் அயரா உழைப்பையும் தரும்.

- இன்றைய வாழ்வியல் சூழல்களில் நம்பிக்கைகளின் இடம் குறித்து விவாதிக்க.
- பள்ளி அறிவியல் மன்றத்தின் சார்பாக நடைபெறும் 'அறிவியலும் நம்பிக்கைகளும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான உரை தயார் செய்க.

**வேற்றுமை உருபுகள்**

செல்வன் நல்லவன்.

செல்வனைப் பார்த்தேன்.

செல்வனோடு கடைக்குச் சென்றேன்.

செல்வனுக்கு ஒரு புத்தகம் கொடுத்தேன்.

செல்வனைவிடச் சிறந்தவர்கள் யாரும் இல்லை.

செல்வனது வீடு அழகானது.

செல்வனிடம் நல்ல ஓவியங்கள் உள்ளன.

செல்வா! சீக்கிரம் வா.

இவற்றுள் முதல் வாக்கியத்தையும் இறுதி வாக்கியத்தையும் தவிர பிற வாக்கியங்களில் செல்வன் என்ற பெயருடன் ஐ, ஒடு, கு, விட, அது, இடம் என்ற கூறுகள் இணைந்து வந்தபோது பொருள் மாற்றம் ஏற்பட்டதைக் கவனித்திருப்பீர்கள். இவ்வாறு பொருள் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமான கூறுகளை **வேற்றுமை உருபுகள்** என்பர்.

- வேற்றுமை உருபுகள் சேர்ந்துவரும் சொற்களைத் திரட்டுக.
- 'தேன்மொழி' என்னும் பெயருடன் ஐ, கு, அது ஆகிய வேற்றுமை உருபுகள் சேர்ந்து வருமாறு வாக்கியங்கள் அமைக்க.

# 1

# முதுமையின் பெருமை

# எந்தையும் தாயும்

## முதியோர் காதல்

**மூத்த பிள்ளை முதியவரோடு**

வேடப்பன் தம்பி யான
வெற்றிவேல், மனைவி யோடு
வேடப்பன் வாழ்ந் திருந்த
வீட்டினில் வாழு கின்றான்,
வேடப்ப னோ, தன் தந்தை
வீட்டினிற் குடும்பத் தோடு
பீடுற வாழு கின்றான்,
பெற்றவர் முதுமை பெற்றார்

**முதியோருக்கு**
**மருமகள் தொண்டு**

வேடப்பன் மனைவி யான
நகைமுத்து மிகவும் அன்பாய்
வேடப்பன் தந்தை தாய்க்கு
வேண்டுவ தறிந்தே அன்னார்
வாடுதல் சிறிதும் இன்றி
வாய்ப்புறத் தொண்டு செய்வாள்,
ஆடிய பம்ப ரங்கள்
அல்லவா அம்மூத் தோர்கள்?

**மணவழகர் தங்கம்**

தலைக் கடை அறைக்குள் அந்தத்
தளர்மண வழகர் ஓர்பால்
இலக்கியம் படிப்பார்! இன்பத்
துணைவியார் கேட்டி ருப்பார்!
உலர்ந்தபூங் கொடிபோல் தங்கத் (து)
அம்மையார் ஒருபால் குந்திப்
பலஆய்வார்; துணைவர் கேட்பார்;
துயிலுவார்; பழங்காலத்தார்.

**மணவழகர் உடல்நிலை**

மணவழ கர்க்கு முன்போல்
வன்மையோ தோளில் இல்லை!
துணைவிழி, ஒளியும் குன்றக்
கண்ணாடித் துணையை வேண்டும்
பணையுடல், சருகு! வாயிற்
பல்லில்லை! மயிர்வெண் பட்டே!
உணவெலாம்! பாலின் கஞ்சி;
உலவுதல் சிறிதே ஆகும்.

**தங்கத்தம்மையார்**
**உடல் நிலை**

நன்னிலாக் கதிர்போல் கூந்தல்
நரைத்தது, கொண்டை யிட்டு
முன்னிலா முகில்உண் டாற்போல்
முகத்தொளி குறைய லானார்!

அன்புடல் அறத்தால் தோய்ந்த
ஆயிரம் பிறைமு தாட்டி
மன்னுசீர் அன்னாள் மெய்யோ
வானவில் போற்கூ னிற்றே!

**மக்கள் பேரர்**

இருபெரு முதியோர் தம்மைத்
தலைக்கடை அறைசு மந்து
பெரும்பேறு பெற்ற தன்றோ!
பிள்ளைகள், அவர்ம னைமார்
வருவார்கள்; அறங்கேட் பார்கள்,
மற்றுள பேர்த்தி பேரர்
வருவார்கள் அளவ ளாவி
மணியோடு பள்ளி செல்வார்.

**இரு முதியோர்**

**நிரம்பிய உள்ளம்**

மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம்
மகள்மார்க்கும் அவ்வா றேயாம்
எம்தக்க கடன் முடித்தோம்
இனிதாக வாழுகின்றோம்.
முந்துறச் சுற்றத் தார்க்கும்
செய்வன முழுதும் செய்தோம்
இந்த நாள் வரைக்கும் வாய்மை
இம்மியும் மறந்த தில்லை.

**நாட்டுக்கு**

**நலம் செய்தோம்**

இந்நாட்டின் நலனுக்காக
நல்லறம் இயற்றி வந்தோம்,
எந்நாளும் பிறர்க்குத் தீமை
எங்களால் நடந்த தில்லை.
சின்னதோர் நன்று செய்தார்
திறம்மறந் தறியோம் என்றே
இன்னிசை பாடும் அன்னார்
இரண்டுள்ளம் இன்பம் கொள்ளும்.

**நீண்ட நாள்**

**உயிர் வாழக் காரணம்**

மற்றொருநாள் காலையிலே மணிமொழியார் வந்தார்
மணவழகர் அன்போடு வரவேற்புச் சொன்னார்,
“இற்றைநாள் நூற்றைந்தாண் டாயினஉ மக்கே
இத்தனை நாள் உயிர்வாழக் காரணந்தான் என்ன?
சற்றதனை உரைத்திடுக!” எனக்கேட்டார் மொழியார்
“எந்தைதாய் நல்லொழுக்க முடையவர்கள்; என்னைக்
கற்றவரில் ஒருவன்என ஆக்கிவைத்தார்; நானும்,
கருத்தினிலும் சேர்த்தறியேன் தீயொழுக்கம் கண்டீர்,

**நன்மனைவியுடையார்**

**எல்லாம் உடையார்**

இவையன்றி நானடைந்த மனைவியோ என்றால்
எனக்கினியாள்! என்னிரண்டு கண்களே போல்வாள்
நவையில்லாள்; நான் வாழத் தன்னுயிரும் நல்கும்
நாட்டத்தாள்; அவளாலே என் வாழ்க்கை காத்தேன்;
அவளாலே நல்லொழுக்கம் தவறாமை காத்தேன்;
அவளால் என் குடும்பம் மாசிலதாய்ச், சற்றும்
கவலையிலா தாயிற்று, நன் மனைவி உடையார்!
கடலுலகப் பெரும்புகழும் வாழ்நாளும் உடையார்!



**உலக அமைப்புக்கு**

**இலேசு வழி**

இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட
வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு பெண்களை
ஆடவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை
விட்டொழிக்க வேண்டும்
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்
ஒரு நூலா?
செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம்
தேடல்
செயற்பால யாவினுமே முதன்மைஎனக்
கொண்டே
அவ்வகையே செயல் வேண்டும்!
அறிவு மனையாளால்
அமைதியுல குண்டாகும் என்ன இதில்
ஐயம்?

**-பாரதிதாசன்**

**(குடும்பவிளக்கு)**

- பாரதிதாசன் காட்டும் குடும்பச் சூழல் குறித்துக் கலந்துரையாடி, இன்றைய குடும்பச் சூழலுடன் ஒப்பிட்டு உங்கள் கருத்துகளைத் தொகுத்துரைக்கவும்.

# ஏன் இந்த அவல நிலை?

சமீபத்தில் ‘தி ஹிந்து’ நாளிதழில் நான் படித்த ஒரு செய்தி என்னை உலுக்கிவிட்டது!

புதுதில்லியில் லோதிகா சர்க்கார் என்னும் பெண்மணி சட்டக் கல்லூரியில் சிறந்த பேராசிரியர். பெண்ணினத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயத்திற்காகவே அநேக சட்டங்களை உருவாக்கியவர்! ஆனால், 87 வயதில் இன்று அவரது நிலை? கணவனை இழந்து, மக்களும் இல்லாததால் வீடிழந்து, சொத்திழந்து பரிதாப நிலையில் இருக்கிறார்.

லோதிகா சர்க்காரின் நண்பரது மகன், அவருடைய ஆடம்பரமான பங்களாவை அபகரித்துக்கொண்டு, அதைத் தன் மனைவிக்கு லோதிகாவே அன்பளிப்பாகக் கொடுத்ததாகக் கூறுகிறார். தற்பொழுது லோதிகா தன்னுடைய வீட்டை மீட்டுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய நண்பர்கள் அவரை அந்த வீட்டிலிருந்து காப்பாற்றி அழைத்து வரும்போது அந்த வீட்டுச் சிறைப் பறவையாக இருந்திருக்கிறார்! அவருடைய பொருட்கள் எல்லாவற்றையும் அவருடைய மூக்குக்கண்ணாடி, செக்புக் உள்பட அனைத்தையும் விட்டுவிட்டு, உயிர்பிழைத்தால் போதுமென்று வந்துவிட்டார்!.

வசதியாக வாழ்ந்த லோதிகாவின் வங்கிக் கணக்கு காலி! அவருடைய பரம்பரை நகைகள் எதுவும் காணவில்லை. மேலும், கல்கத்தாவில் இருந்த அவருடைய பெற்றோரின் பங்களாவை விற்ற பணம் என்னவாயிற்று என்றும் தெரியவில்லை. “அவரை அதிகப்படியான போதைக்கு ஆட்படுத்தி, அவரது நினைவாற்றலையே மழுங்கடித்துவிட்டு எல்லாவற்றையும் அபகரித்துவிட்டார்கள்!” என்று சிலர் கூறுகின்றனர்!

நல்லிதயம் படைத்த சில பிரமுக நண்பர்கள் ஒன்றுகூடி, லோதிகாவுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டிய முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்பது ஒரு நற்செய்தி!.

இச்செய்தியைப் படித்ததும் என் மனதில் தோன்றியவர் நம் முதுபெரும் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்தான். அவர் வீடெல்லாம் இழந்து, வைக்க இடமில்லாமல் போனதால், தம்முடைய படைப்புகளை எரித்துவிட்டதாகவும், எலும்பு முறிவாகி மருத்துவமனையில் இருந்து குணமானவரைக் காவல்துறை அதிகாரி திலகவதி ஐ.பி.எஸ். ‘விஸ்ராந்தி’ முதியோர் இல்லத்தில் சேர்த்திருப்பதாகவும் அறிந்தேன்.

என் கண்களில் கண்ணீர் வரவில்லை; ரத்தம் வந்தது! எப்பேர்ப்பட்ட எழுத்தாளர்! அநேக கதைகளும் நாவல்களும் எழுதிய அவருக்கா இந்த நிலை? அவருடைய கணவரும், அரசாங்கத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர்! ராஜம் கிருஷ்ணனும் எழுத்துமூலம் புகழும் பணமும் நிறையவே சம்பாதித்தவர். அப்படியிருக்க அவருடைய சொத்தெல்லாம் என்னவாயிற்று? எல்லாம் மர்மமாகவே இருக்கிறது. மிகவும் படித்தவர்கள், பிறரை நம்பி எப்படி ஏமாறுகிறார்கள்?

இன்னொரு அனுதாபக்கதை... கர்நாடகாவின் தலை சிறந்த வீணை மற்றும் வாய்ப்பாட்டு விற்பன்னர் நீலம்மா கிடாம்பி அவர்களைப் பற்றியது. மைசூர் மகாராஜாவின் ஆஸ்தான வித்வாம்சினியாக இருந்து பெரும் பெயரும் புகழும் செல்வமும் ஈட்டியவர் நீலம்மா. கணவர் பிரபல வழக்கறிஞர்! குழந்தைச் செல்வம் இல்லாததே குறை.

மைசூரில் பெரிய பங்களா, வசதிகள்! கணவர் காலமானபின் என்னவாயிற்று? கடைசியில் பெங்களூர் மருத்துவமனை ஒன்றின் வாசலில், சுய நினைவில்லாமல் அநாதையாகக் கிடந்தவரைச் செவிலியர்கள் பார்த்து அட்மிட் செய்து, சிகிச்சை கொடுத்தும் சில நாட்களில் இறந்துவிட்டார்! இதில் வருத்தத்திற்குரிய வேடிக்கை என்னவென்றால், அவர் இறந்தவுடன், முதல் மந்திரியிலிருந்து அநேக அமைச்சர்கள், அரசாங்கப் பிரமுகர்கள் அவருடைய பூதவுட

லுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்! வி.ஐ.பி.கள் தங்களுக்குப் பிரபலம் தேடும் வழிகளில் இதுவும் ஒன்று! இதைவிட, நீலம்மா இருக்கும்போதே அவருக்கும் அவருடைய சொத்துக்கும் பாதுகாப்பு கொடுத்திருந்தால் எவ்வளவு உயர்வாக இருந் திருக்கும்?

தனியாக இருக்கும் வயதான பெண்மணி களுக்குச் சட்டப் பாதுகாப்பும், வாழ்வதற்கு உள்ள வசதிகளும் கிடைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? குறைந்த பட்சம், அவர்களது வாழ்க்கைத்தரம் மிகவும் கீழே போய்விடாமல் பாதுகாக்க வேண்டாமா?

**- விஜயா ராஜன்**

**(மங்கையர் மலர்)**

- இராஜம் கிருஷ்ணன் போன்ற ஆதரவற்ற நிலையிலிருக்கும் முதியவர்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி வாசகர் கடிதம் ஒன்று தயாரித்து வெளியிடுக.

### முதியோர் விழிப்புணர்வு நாள்

“முதியோர் கொடுமை அறவே ஒழிக்கப்பட்ட உலகமாக, நமது உலகம் திகழட்டும்” என்ற அறைகூவலோடு WHO, IFA மற்றும் INPEA இணைந்து 2006–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15–ஆம் நாளை “முதியோருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் ஒழிய உலக விழிப்புணர்வு நாளாக” அறிவித்தது. அன்று முதல் மூத்த குடிமக்கள் மன்றம்வழி நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் மெருகூட்டும் வகையில் இந்நாளை இளைஞர்கள் மத்தியில் பரப்பி வருகிறோம். இது தவிர, மன்றம் துவங்கி 1996–ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட முதியோர்களைப் பலவிதமான கொடுமைகளிலிருந்து விடுவித்து, மதிப்பும் மரியாதையும் மீண் டும் கிடைக்க உரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

ஆயிரக்கணக்கில் மாணவர்களை உறுதி மொழி ஏற்கச் செய்வதுடன் அவர்களது வளாகத்தில் பல போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் மூத்த குடிமக்கள் மன்றத்துடன் இணைந்து நடத்திட ஊக்குவித்து வருகிறோம். பல களப்பணிகளும், சிறப்பு வெளியீடுகளும் செய்யப் படுகின்றன.

ஆனால், இந்தச் சென்னை மாநகரம் மட்டுமல்லாது இந்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இவ் விழிப்புணர்வு சென்றடைய வேண்டும். ஏன் என்றால், இக்கொடுமை ஒவ்வொரு குடும்பத்தி லும், சமூக அமைப்பிலும், நிறுவனத்திலும் நாள்தோறும் நடைபெறுகிறது. முதியோர், மக்கள் தொகையில் வறுமையில் வாடுவோரும் கிராமப்புறங்களிலும் கணிசமாக உள்ளனர். நமது இந்தியத் திருநாட்டில் அவர்கள் பலவிதமான கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். அடித்துத் துன்புறுத்துவது, மனதைத் துன்புறுத்துவது. சொல்லால் (உணர்வுகளைத்) துன்புறுத்துவது, சொத்துக்காகத் துன்புறுத்துவது, தெரிந்தோ தெரியாமலோ உதாசீனப்படுத்துவது, புறக்கணிப்பது ஆகியவை கொடுமைகளுள் அடங்கும். இன்னும் சொல்லப்போனால் எந்த ஒரு செயலும் வயது முதிர்ந்தோரை உடலாலும் உள்ளத்தாலும் பாதித்து அவருடைய பாதுகாப்புக்கும் மருத்துவ நலத்துக்கும் ஊறு விளைவித்தால் அதுவும் கொடுமை எனக் கருதப்படும்.

இவற்றை அறவே ஒழிப்பதில் அரசு, அரசுசாரா அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங் கள், ஊடகங்கள் ஆகியவற்றுக்கு அதிக பொறுப்பு உண்டு. முதியவர்களைப் பேணிக்காத்துப் போற்றும் செயல்திறனிலும், ஆலோசனை மற்றும் உதவி வழங்குவதிலும், விழிப்புணர்வு பிரச்சாரத்திலும் அவர்கள் ஈடுபட வேண்டும். மூப்பியல், சமூகவியல், குற்றவியல்,தொண்டு வியல், மருத்துவ மற்றும் செவிலியியல், மனநலவியல் போன்ற சிறப்புத்துறை வல்லுநர்கள் கொடுமைகளைக் களைவதில் கவனம் செலுத்த வேண்டும்.

நம்மிடம் சட்டங்களுக்குப் பஞ்சமில்லை. இந்திய அரசியல் நிர்ணய சட்டம் (பிரிவு 21, 39 மற்றும் 41, 47) இந்திய முதியோர் நலக் கொள்கை வரைவு (NPOP) 1999, பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்புச் சட்டம் 2007 ஆகியவை ஆழ்ந்த நித்திரையில் விடப்பட்டுள்ளன. இந்திய அரசும் மாநில அரசும் NPOP 1999-க்கு முழுமையாக உயிர் கொடுத்துச் செயற்படுத் தினாலே மூத்த குடிமக்களுக்கு உண்மையான மதிப்பு, மரியாதை, செல்வாக்கு நிச்சயம் ஏற்படும்.

ஒன்றுபடுவோம் நாம். நம்மை நாமே மேம்படுத்துவோம். சக்தி படைப்போம்.

**- கேப்டன் மு.சிங்கராஜா**

**(முதியோர் காவலன்)**

- முதியோர்களும் அவர்களது அனுபவங்களும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் உறுதிமொழி தயார் செய்க.

# நல்லன செய்

பல்சான் றீரே பல்சான் றீரே
கயல்முள் என்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின் அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே.

**- நரிவெரூஉத்தலையார்**
**(புறநானூறு : 195)**

- "நல்லது செய்த லாற்றீ ராயினும்
  அல்லது செய்த லோம்புமின்"

  இப்பாடலடிகளுக்கு இணையான பழமொழிகளைத் திரட்டி எழுதுக.

# படியேறும் வாசனைகள்

## இலையுதிர் காலம்

பளிச்சென்று விடுதியின் விஸ்தாரமான முன் முற்றத்தில் விழுந்திருந்த போக்கு வெயிலில் நனைந்தவாறு விடுதி வேன் வந்து நின்றது. அரசாங்க ஆஸ்பத்திரி சூப்பிரண்டிட மிருந்து வாங்கிய இசைவுக் கடிதத்துடன், வேனிலிருந்து முதலில் இறங்கிய விடுதித் தலைவர் சாரங்க பாணியின்கூட இறங்கும்போது ராதாகிருஷ்ணனின் மனத்தில் நிறையும் பெருமிதம்.

ஆஸ்பத்திரியிலிருந்து அழைத்து வரும் புதிய விருந்தாளிகளை வரவேற்கச் சில விடுதி வாசிகள். வெளிவராந்தாவில் வந்துநின்று சிரித்த வாறு தன்னைப் பார்த்துக் கையை ஆட்டும் பி.பி. வேறுசில நெருக்கமானவர்கள்.

புதிய இடத்தைப் பரக்கப் பரக்கப் பார்த்த வாறு வேனில் இருந்து இறங்குகிறவர்களைக் கைபிடித்து இறங்க உதவிக்கொண்டிருக்கும் செல்லப்பன்... மொத்தம் பதினைந்து நொடிந்து போன வயோதிகர்கள். ஒன்பது கிழவிகள், ஆறு கிழவர்கள்... அறுபதிலிருந்து எண்பத்தைந்து வயதைத் தாண்டியவர்கள் வரை இருந்தார்கள்.

திக்கற்றவர்களாகிவிட்ட இந்தப் பதி னைந்து பேரையும் அரசாங்க ஆஸ்பத்திரியின் அனாதை வார்டிலிருந்து இப்படி இங்கே புகலிடம் கொடுத்து அழைத்துவர ஒருவிதத்தில் காரணமாயிருந்த முத்தய்யா கடைசியில் இறங்கிக்கொண்டிருந்தார்.

அங்கே நின்றிருந்த சாரங்கபாணி, செல்லப்பன், வேறு சில முதியவர்களிடம், இன்னிக்கு புதுசா வந்தவங்களை அவுங்க அறைகளுக்குக் கூட்டிகிட்டுப் போக வேண்டிய பின், இரண்டு வார ஆஸ்பத்திரி வாசத்தால் களைத்துப் போய் விட்ட முத்தய்யாவைக் கைத்தாங்கலாக அவர் அறைக்குக் கூட்டிக் கொண்டுபோய் படுக்க வைக்கும்போது வேதனையும் ஆயாசமும் நிறைந்திருந்த அந்த முகத்தில் தென்பட்ட திருப்தி.

– ராதாகிருஷ்ணன், உங்களை இங்கே வரும் முன் எனக்குத் தெரியாது... இங்கே நான் வந்து ஒரு மாசம்கூட ஆகல்லே... ஆனா... அதுக் கிடையில் உங்களைப் போன்ற நல்லவங்களை எனக்குப் பாக்க முடிஞ்சது நான் செய்த புண்ணியம்தான்...

அவரை மேலே பேசவிடாமல், ஓய் வெடுக்கச் சொல்லிவிட்டு அறைக்கு வந்து படுத்தபோது, காலையிலிருந்து இந்நேரம்வரை ஆஸ்பத்திரியில் வார்டிலும், ஆபீஸிலும் எல்லாம் அலைந்த களைப்பின்கூட சேர்ந்து கொண்ட வழக்கமான தலைச்சுற்றலும், கழுத்துவலியும்...

யார் நல்லவங்க?

யார் கெட்டவங்க?

யார் அனாதைகள்?

யார் அனாதைகளல்லாதவர்கள்?

ஒருவிதத்தில், இங்குள்ள எல்லோருமே அனாதைகளான, போக்கடியில்லாத, திக்கற்ற நல்லவங்கதானே...

மனைவி, மக்கள் – நாலு மகன்கள், மூணு மகள்கள், நஞ்சை நிலம், குடும்ப வீடு – இப்ப டியெல்லாமிருந்த இந்த முத்தய்யா, இன்று இங்கே இப்படி..

மூன்று மகள்களையும் நல்ல இடத்தில்

திருமணம் செய்து அனுப்பினாராம், மகன்கள் நாலு பேர்களும் நல்ல வேலையில் அமர்ந்து மனைவி குழந்தைகளுடன் சுகமாக வாழ்கிறார் கள்...

பின் என்ன குறை?

ஒரு மாதம் முன், எல்லாவற்றையும் குடும் பத்துக்காகச் சமர்ப்பித்துவிட்டு, நொந்த மனத்து டன் இங்கே வந்து சேர்ந்த முத்தய்யாவின் குரல்... ஏழு பேர்களையும் நல்ல முறையில் வளர்த்தி ஆளாக்கிப் படிக்க வைக்க, கல்யாணம் செய்து அனுப்ப எல்லா பாங்கிலிருந்தும் வேறு பல இடங் களிலிருந்தும் கடன் வாங்க வேண்டியிருந்தது. அன்றாட வீட்டுச் செலவு எக்கச்சக்கமாகக் கூடி யதால் கடனைச் சரியாகத் திருப்பித் தர முடி யல்லே... வேறு வழியில்லாமல் வீட்டையும் நிலத் தையும் விற்க வேண்டி வந்தது.

இப்போது பதினைந்து பேரன் பேத்தி களின் தாத்தாவான முத்தய்யா அவர்களில் பலரையும் இதுவரை பார்த்ததே இல்லையாம்...

– வீட்டை விட்டு இறங்கும்போது, நான் ஒருவேளை செத்துப்போனால் என் உடம்பைக் கூட என் பொண்டாட்டி பிள்ளைகளுக்குக் காட்டக் கூடாதுன்னு நான் ஏற்பாடு பண்ணியி ருக்கேன்.

இங்கே வந்து சேர்ந்து ஒரு வாரத்தில் கடு மையான ஜுரத்தால் அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்ந்திருந்த அவரைப் பார்க்கச் சென்றபோது அவர் ஜுர வேகத்தில் தன்னிடம் சொன்ன வார்த்தைகள் இப்போதும் தன்னை அலைக்க ழிக்கிறதே!

அன்றுதான், தாங்க முடியாத மனச்சுமை யுடன் ஆஸ்பத்திரியின் அந்த அனாதை வார்டு தன் கண்ணில் பட்டதும், அதைப் பற்றிய கூடுதல் தகவல்கள் தன்னை வந்து எட்டியதும்...

வயோதிக சகஜமான பலவித வியாதிக ளின் சிகிச்சைக்காக இந்த அரசாங்க ஆஸ்பத் திரியில் சொந்தக்காரர்களால் சேர்க்கப்பட்ட சிலரை, அவர்கள் வியாதி குணமான பின்னரும் கூட்டிக்கொண்டு போகச் சொந்தக்காரர்கள் யாரும் வராததால் ஆஸ்பத்திரியின் அனாதை வார்டில் தங்க வைத்திருந்தார்களாம். சொந்தமாக உழைத்துப் பிழைக்க முடியாத இந்த வயோதிகர் களை என்ன செய்வது என்று தெரியாமல் ஆஸ்பத்திரிக்காரர்கள் திணறிக்கொண்டிருக்கி றார்களாம்.

அன்றே இந்த விஷயத்தை, விடுதியில் வந்து, தான் தெரிவித்தபோது பி.பி. போன்ற தனக்கு மிக நெருக்கமான ஒருசிலரைத் தவிர



வேறு யாரும் அதைப் பற்றிப் பெரிதாகக் கவலை கொள்ளவில்லை. இருந்தும், மனம் தளராமல், விடுதியின் ஆட்சிக் குழுவுக்கு எடுத்துச்சென்று வாதிட்டதுடன், தன்னைப் போன்ற அங்கே வாழும் ஓய்வூதியம் மாதா மாதம் பெறும் சில வயோதிகர்கள் தம் ஓய்வூதி யத்திலிருந்து ஒரு சிறிய தொகையை இதுக்காக ஆட்சிக் குழுவுக்குக் கொடுப்பதாகவும் உறுதிய ளித்துக் கையொப்பங்கள் சேகரித்துக் கொடுக் கப்பட்டன. அப்படித்தான், அன்று அந்த அனாதை வார்டிலிருந்த இந்தப் பதினைந்து பேரின் பராமரிப்பை இந்த விடுதி ஏற்றுக்கொள் ளுமென்று, விடுதித் தலைவரிடமிருந்து கடிதம் வாங்கி, கொண்டுபோய்க் கொடுக்க முடிந்ததே....

எது எப்படியோ... யாருக்கும் வேண்டாத வர்களாகி ஆஸ்பத்திரியில் அனாதைகளாய்க் கிடந்த இந்த மூத்த குடிமக்களுக்கு அன்பின் லேசான ஒரு ஸ்பரிசத்தையாவது இதன் மூலம் அளிக்க வாய்ப்பு கிடைத்ததற்குக் கடவுளிடம் தான், நன்றி சொல்ல வேண்டும்.

ஆனால்.....

அன்று ஆஸ்பத்திரியில் பார்த்ததிலிருந்து இன்று இங்கே வந்து இறங்கும் வரை இவர்கள் ஒவ்வொருவரின் ஒளி மங்கிப்போன குழி விழுந்த கண்களைப் பார்க்கும்போதெல்லாம்...

இந்த முத்தய்யாவைப் போலவோ அதை விடவோ மோசமான சென்றகால கசப்பான வாழ் வின் உடைமைகள் என்ற போதம் தன்னை வந்து தாக்குகிறதே... சென்றகால நினைவைச் சொல்ல வும் மெல்லவும் முடியாமல், மறதியின் வரப்பிர சாதத்தில் மயங்கி அந்திம நாளை எண்ணி ஏங் கிக் கொண்டிருக்கும் இவர்கள் ஒவ்வொருவரைப் போல், இந்தப் பூவுலகில் இன்னும் எத்தனையெத் தனை பேர்கள் உலகின் ஒவ்வொரு கோணிலும் உயிரெனும் சுமையை சுமந்து அமிழ்ந்துகொண் டிருக்கிறார்களோ....!

**– நீலபத்மநாபன்**

- ‘இலையுதிர்காலம்’ நாவலின் பகுதியை வாசித்தபின் உங்கள் மனதில் ஏற்பட்ட மன உணர்வுகளை வகுப்பில் வெளிப் படுத்துக.

# பாட்டி மணம்

வாசலிலிருந்து
நடுக்கமான ஒரு குரல் உள்ளே நுழைந்து
அழைக்கும்.. ‘பாபூ’
பாட்டி வருகிறாள்

ஒவ்வொரு முறை படியேறும்போதும்
பாட்டியுடன்
வாசனைகளும் படியேறும்

பாட்டிக்கு இரண்டு வாசனைகள்:
ஒன்று பாட்டியின் சொந்த மணம்
வெற்றிலையும் திருநீறும் குழம்பிய ஒரே மணம்

மற்றது
அவள் பிரியத்தின் வாசனை
பைக்குள் பிரியத்துக்கு வேறு வேறு வாசனை

ஒவ்வொரு முறையும்
பாட்டியுடன்
ஒவ்வொரு வாசனை
படியேறும்

ஒரு சமயம்
தேங்காயெண்ணெயில் பொரிந்த வாழைச்சீவல்
ஒரு சமயம்
ஆரஞ்சுப் பழம்
ஒரு சமயம்
சீனிப் புளியங்காய்

ஒரு சமயம்
வறுத்த மீன்

வாசனையில்லாத பையுடன்
ஒரு நாளும்
பாட்டியின் அழைப்பு
படியேறாது
பாட்டியிடம்
சொற்களின் வானம் இருந்தது
ஒரு சூரியனும் இருந்தது

அவ்வப்போது
சூரியன் விடிந்து
எனது சின்ன உலகில்
அநேக முகங்களை அடையாளம் காட்டியது

எத்தனை முகங்கள்...
எத்தனை நபர்கள்....
பொன்பட்டு சுற்றிய கிருஷ்ணன்
நதிக்குரலில் அழுத கர்ணன்
விரல் முறிந்த ஏகலைவன்
சிறகடிக்கும் ராஜகுமாரி
சீழ்க்காயங்களுடன் திரிந்த அஸ்வத்தாமன்
இராம சந்தேகம் விழுங்கிய சீதை
ஞானப் பானையுடன் நடந்த பூந்தானம்
கல்லை உருட்டிய நாராணத்துப் பைத்தியம்

நபர்கள் எத்தனை?
முகங்கள் எத்தனை?

பாட்டியின் சூரியன் ஒளிர்ந்து
எனது உலகம்
உருவங்களின் திருவிழா ஆனது

வாசனைகளையும்
சூரியனையும் விட்டுவிட்டு
பாட்டியும் ஒரு நாள் கரைந்தாள்
எனது
காட்சி மனதில் இன்று
அவளும் ஒரு படம்

ஒரே மணம் பாட்டிக்கு
என்றேனே?
தவறு
பாட்டிக்குப் பல மணங்கள்

சிரசில்
வறுத்த
தேங்காய் மணம்
முகத்தில்
சந்தன மணம்
தோளில் வியர்வை மணம்
விரல்களில்
துளசி மணம்
பாதங்களில்
வேர்களின் மணம்

எனக்குப் பிடித்த பாட்டி மணம்
தொங்கிய காதுத்துளைகளில் முனகும்
காற்றின் மணம்
ஏனெனில்
காற்றில் மணக்கிறது என் பெயரும்
'பாபூ..'

**– சுகுமாரன்**
**(பூமியை வாசிக்கும் சிறுமி)**

- 'குடும்ப உறவுகளில் முதியோர்களின் பங்கு' பற்றிக் கலந்துரையாடுக.
- பாட்டியோடு மறக்க முடியாத உன் அனுபவ நிகழ்வினை உன் நண்பனுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் கடிதம் ஒன்று தயாரிக்க.

# பெற்றமனம்

## காய்ச்ச மரம்

நிம்மாண்டு நாயக்கர் வயசாளி, பேரக்காள் அவர் மனைவி. அந்த இருவரின் முடிவு காலத்தைப் பற்றிய கதை இது.

நிம்மாண்டு நாயக்கர் பெரிய சம்சாரி. எண்பது ஏக்கர் கருசக் காடு.

நாலு சோடி உழவு மாடு, தொழுநிறைய கால்நடைச் செல்வங்கள். நிறைஞ்ச வெள்ளாமைக் குடியிருக்கும் வீடு, பூர்வீக வீடு போக மூணு கார வீடுகள்.

நிம்மாண்டு நாயக்கருக்கும் பேரக்காளுக்கும் மொத்தம் 8 பிள்ளைகள். 4 ஆம்பளப் பிள்ளைகள், 4 பொம்பளப் பிள்ளைகள். பொம்பளப் பிள்ளைகளை நல்ல இடத்துல கட்டிக் கொடுத்திருக்கு. ஆம்பளப் பிள்ளைகள் நாலு பேருக்கும் நல்ல இடத்திலே பெண் எடுத்திருக்கு. நிம்மாண்டு நாயக்கருக்கும் பேரக்காளுக்கும் பிள்ளைகள் மேல் கொள்ளைப் பிரியம். பேரக்காள் வாக்கப்பட்டு வரும்போது நூறு பவுன் நகையோடு வந்தாள். அந்தக் காலத்திலே நூறு பவுன்னா சும்மாவா? பொம்பளப் பிள்ளைகளுக்குப் போட்டதுபோக மீதியைப் பேரப்பிள்ளைகளுக்குப் போட்டாச்சு.

நாளடைவில் சொத்தைப் பிரிக்கணும், சொத்தைப் பிரிக்கணும் என்று சிறிசுகளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஆனால், சொத்தைப் பிரிச்சுக் கொடுங்க என்று நேரடியாக அப்பாவைக் கேட்கப் பையன்களுக்குப் பயம். எப்படியோ இந்த விசயம் பெரியவரின் காதுகளுக்கு எட்டியது. ஒரு நாள் பருத்திக்காட்டுக்குப் போய்விட்டுத் திரும்பும் போது அலுப்புத் தாங்க முடியாமல் நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.பேரக்காளைப் பார்த்து, "பேரக்காள், என்னடி சொல்றே? பையன்கள் சொத்தைப் பிரிக்கணும்னு ஆசைப்படுறாங்களாம். நீ ஏதும் கேள்விப்பட்டாயா?" என்றார் நிம்மாண்டு.

"இதிலே என்ன இருக்கு? எப்ப இருந்தாலும் அவங்ககிட்ட ஒப்படைக்க வேண்டிய பாரம் தானே. பிரிச்சுக் கொடுத்திட வேண்டியது தானே? நமக்கும் வயசாகிப் போச்சு. கிட்ணா, ராமான்னு உட்கார்ந்து சாப்பிடவேண்டிய காலத்திலே ஏன் இப்படி லோலோன்னு அலைஞ்சு திரியணும்?" என்றாள் பேரக்காள்.

பேரக்காள் சொன்ன பிறகு அப்பீல் ஏது?

மறுநாள் பையன்கள் நாலு பேரையும் வரச் சொன்னார் நிம்மாண்டு நாயக்கர். பாகப்பிரிவினை பற்றி அவர்களிடம் பேசினார். அவர்களும் சரி என்று தலையாட்டினார்கள்.

"சரி, அப்ப நீங்க மத்தியஸ்தர் ஒருவரைக் கூட்டி வாருங்கள்" என்றார் பெரியவர்.

"நீங்க பார்த்து எப்படிச் செய்தாலும் சரிதாம் பா. நீங்க என்ன ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்புமா வைக்கப் போறீங்க" என்றார்கள் பையன்கள்.

"அப்படி இல்லேடா கோட்டிப் பயபுள்ளைகளா! பாகம் பிரிக்கிறதுண்ணா மத்தியஸ்தர் ஒருத்தர் கட்டாயம் வேணும். போயி யாரை யாவது ஒருத்தரைக் கூட்டிக்கிட்டு வாங்க" என்றார் பெரியவர்.

பையன்கள் நால்வரும் பாறைப்பட்டி கந்தசாமி நாயக்கரைக் கூட்டி வந்தார்கள்.

பாறைப்பட்டி நாயக்கர் எல்லோருக்கும் பொது வானவர். ஊர்ப் பெரிய மனுசன், தெற்கு வடக்கு போய் வரும் மனுசன். விபரம் தெரிந்தவர்.

பாறைப்பட்டி நாயக்கர் வந்தார். "வாங்க பாறைப்பட்டி மாப்ள!'' என்று சிரித்தபடி நிம்மாண்டு நாயக்கர் வரவேற்றார்.

பாறைப்பட்டி நாயக்கர் தொழுவத்திலேயே உட்கார்ந்து கொண்டார். வீட்டுக்குள் உட்கார்ந்தா வெத்திலை எச்சி துப்ப எந்திரிச்சு எந்திரிச்சு வெளியே வரணும். தொழுவம்தான் சரி.

பேரக்கா காப்பித் தண்ணீர் கொண்டு வந்தாள். காப்பி குடித்த பின்பு பாறைப்பட்டி நாயக்கர் வெற்றிலை போட்டார். நிம்மாண்டு மெல்லப் பையன்களின் ஆசைகளைச் சொன்னார்.

''என்னைக்கி இருந்தாலும் அதைச் செஞ்சிட வேண்டியதுதானே" என்று ஒத்துக் கொண்டார் பாறைப்பட்டி நாயக்கர்.

வீட்டிலிருந்த பருத்தி, வத்தல், மல்லி, தானியங்கள் உட்பட மொத்த சொத்தும் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டன. எல்லாம் வாய்க் கணக்காகவே. சரிதானே என்று கேட்டார் பாறைப்பட்டி. பையன்கள் தங்கள் மனைவிமார் களிடம் சென்று கலந்து பேசினார்கள். பின்பு வந்து சரி என்றார்கள்.

நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட சொத்துகள் துண்டுச் சீட்டுகளில் எழுதப்பட்டன. அவற்றைப் பாறைப்பட்டி நாயக்கர் சுருட்டிக் குலுக்கிப் போட்டார். இளையவன் முதலில் ஒரு சீட்டை எடுத்தான். பிறகு ஒவ்வொருத்தராக வந்து சீட்டு எடுத்தார்கள். சீட்டில் எழுதப்பட் டுள்ள சொத்துகள் எடுத்தவர்க்கு.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடு என்று பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வசதியும் இருந்தது; வசதிக்குறைவும் இருந்தது. மருமகள்கள் கண்களுக்கு வசதிக் குறைவே பெரிதாகப்பட்டது. பூர்வீகவீடு அண்ணனுக்குக் கிடைத்தது. அண்ணன் யோகக்காரன் என்று தம்பிகளுக்குப் பட்டது. வயித்தெரிச்சல் தொடங்கி விட்டது.

பாகப்பிரிவினை ஒருவழியாக முடிந்தது என்று பாறைப்பட்டி நாயக்கர் நினைத்துக் கொண்டார். இந்த நேரத்தில் நிம்மாண்டு நாயக்கர் விறுவிறு என்று பூர்வீக வீட்டுக்குள் போனார். வெங்கலத்தவலை ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். பாறைப்பட்டி நாயக்கருக்கு முன்னால் தவலையைக் கவுத்துத் தட்டினார். நாணயங்கள் விழுந்தன. எல்லாம் வெள்ளிக் காசுகள், வெள்ளைக்காரன் காலத்து வெள்ளிக்காசுகள்.

அந்தக் காலத்தில் 12 வெள்ளிக்காசு களுக்கு ஒரு பவுன் தங்கம் வாங்கலாம். மொத்தம் 2000 காசுகள் இருந்தன. காசுகளை யும் சரிசமமாகப் பகிர்ந்தார்கள். காசுகளை மகன் களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்போது நிம்மாண்டு நாயக்கரின் முகத்தைப் பார்க்கணுமே. மனுசன் முகத்திலே ஒரே சந்தோசம்.

"நம்ம அப்பா மாதிரி இந்த ஊரிலே யாரு பிள்ளைகளுக்கு இப்படிப் பகிர்ந்து கொடுத்திருக் காங்க'' என்று பிள்ளைகள் பெருமையாக நினைத்துக்கொண்டார்கள்.

"பொல்லாத கிழவரு! இது மாதிரி இன்னும் எம்புட்டுப் பணத்தை எங்கெங்கே புதைச்சி வச்சிருக்காரோ?" என்று எல்லோரும் நினைத் தார்கள்.

பாறைப்பட்டி கவலைப்பட்டார்.

"இப்போ இந்தக் கிழவர் பண்ணியது வம்பான வேலை. பையன்களுக்கு ஏற்கெனவே போதுமான அளவு கொடுத்திருக்கு. வத்தல், பருத்தி, உளுந்து, மல்லி முதல் கொண்டு அவ்வ ளவும் கொடுத்தாச்சு. இப்பப் போயி இவரு ஏன் பணத்தையும் பகிர்ந்து கொடுக்கணும். நோக் காடு, சாவுன்னா பிரயோசனப்படுமே" என்று பாறைப்பட்டி நினைத்துக் கொண்டார்.

நிம்மாண்டு, பாறைப்பட்டியைப் பார்த்து, "இத்தனை நாள் பிள்ளைகள் என் கையை எதிர் பார்த்து இருந்தாங்க. இனி நான் அவங்க கையை எதிர்பார்த்து இருக்கணும்" என்று சொன் னார்.

பிறகு பிள்ளைகளைப் பார்த்து, "பாருங் கப்பா! இருக்கிறது எல்லாத்தையும் உங்களுக்குக் கொடுத்தாச்சு. அம்மா போட்டிருக்கிற கம்மல், நான் போட்டிருக்கிற வெள்ளி அரணாக்கயிறு மட்டும்தான் மிச்சம். இனி எங்களுக்கென்ன? மூணுவேளை கஞ்சி, கட்டிக்கிடதுணி, தலைக்கு எண்ணெய்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் நிம்மாண்டு நாயக்கர்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒவ் வொரு மாதமும் ஒரு மகன் வீட்டில் இருப்பது என்று முடிவானது.

முதல் தடவை எந்தப் பிரச்சினையும் இல் லை. நாலு வீட்டிலும் நல்ல கவனிப்பு. நாளாக நாளாக நிலைமை மோசமானது.

மூன்று வேளைச் சாப்பாடு இரண்டு வேளை ஆனது. இரண்டு வேளைக் காப்பி ஒரு வேளை ஆனது. பேரக்காள் பிரியமாய்ப் போடும் வெற்றிலையும் நிறுத்தப்பட்டது. அடுத்த அடுத்த மாதங்களில் தலைக்கு எண் ணெயும் போச்சு. உடுமாத்துத் துணி குறைஞ் சாச்சு.

வயசாளிகள் இருவரும் மெலிந்து போனார் கள். உடம்பெல்லாம் வங்கு வத்திப் போச்சு. இரண்டு பேரும் சாயம்போன கந்தல் துணி போல ஆயிப்போயிட்டாங்க.

எண்ணெய் தேய்க்காததால் தலை அட்டுப் பிடித்துப் பிசுபிசுவென்று ஆகிப் போனது. தாங்க முடியாமல் பேரக்காள் ஊர்க் குளத்தில் போய்க் களிமண்ணைத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தாள்.

அன்று பார்த்து, தற்செயலாய்ச் சின்ன மகள் அப்பா அம்மாவைப் பார்த்துப்போக வந்தாள். வந்தவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள். கோபத்தோடும் ஆங்காரத்தோடும் அண்ணன்களையும் மதினிகளையும் திட்டித் தீர்த்தாள்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் குனிந்ததலை நிமிராமல் கண்ணீர் வடித்தார்கள். தன்னோடு வந்து விடும்படி மகள், அம்மா அப் பாவைக் கேட்டாள். கொஞ்ச நேரம் பெரியவர் பேசவில்லை பிறகு சொன்னார்,

"சம்மந்தக்காரங்க வீட்டுல போய் இருக்கி றது நல்லது இல்ல அம்மா! நீ நிம்மதியா ஊருக்குப் போம்மா!" என்றார்.

அன்று இரவு வயசாளிகள் இரண்டு பேருக்கும் தூக்கம் வரலை. ஆதரவு இல்லாத நிலையை நினைக்க நினைக்கக் கலங்கினாங்க. பேரக்காள் நிம்மாண்டு நாயக்கரின் காதில் மெதுவாகக் கேட்டாள். "எங்கேயாவது கண் காணாத இடத்துக்குப் போயிருவோமா?"

அவருக்கும் அதுதான் சரி என்று பட்டது. சரி என்றார் நிம்மாண்டு. இரண்டு நாள் கழித்து நடுவுள்ள மகள் வந்தாள். அப்பா அம்மாவுக் குப் பிடிச்ச பலகாரம் பண்டமெல்லாம் கொண் டாந்து தந்தாள். அவர்கள் நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டாள். போகும்போது அப்பா அம்மா கையில் கொஞ்சம் பணம் கொடுத்து ''நினைக்கிறத வாங்கித் தின்னுங்க'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

ஊரை விட்டுப்போக நினைச்சிக்கிட்டு இருந்த அவங்களுக்கு இந்தப் பணம் உதவியாக இருந்தது. மகள் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு ஒரு நாள் அதிகாலை வயசாளிகள் இருவரும் கோவில்பட்டி புறப்பட்டுப் போனார் கள். தெரிந்தவர்கள் கண்ணில் படாமல் பயந்து பயந்து நடந்தார்கள். கம்மலையும், வெள்ளி அரணாக் கயித்தையும் விற்றார்கள். சாமியைக் கும்பிட்டு ரயிலேறி மதுரைக்குப் போனார்கள்.

மதுரை ரயில்வே ஸ்டேஷனில் கணக்கு வழக்கில்லாத கூட்டம். என்ன செய்யிறது, எங்க போறதுண்ணு தெரியாம இரண்டுபேரும் உட்கார்ந்து இருந்தாங்க.

அந்தக் கூட்டத்திலேயும் பேரக்காகிட்டே ஒரு சின்ன குழந்தை வந்து ஒட்டிக்கிட்டது. பேரக்கா குழந்தையை அணைச்சிக்கிட்டாள். குழந்தையின் குடும்பம் இராமேஸ்வரம் போகுது. எங்க போறதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருந்து இவங்களும் ராமேஸ்வரம் போய்டலாம்னு முடிவு பண்ணி புறப்பட்டுப் போனாங்க.

ரயில் பேரக்காளைக் குலுக்கிக் குலுக்கித் தாலாட்டியது. பேரக்காள் ரயிலில் தூங்கினாள். “எப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்த பொண்ணு! இப்படி ஆய்ட்டதேன்னு” பேரக்காளைப் பார்த்து நிம்மாண்டு நினைத்தார். நினைக்கவும் அவருக்குக் கண் கலங்கியது.

இவர்கள் கண்காணாமல் போன சமாச்சாரம் முதலில் ஊருக்குத் தெரிந்து விட்டது. பிறகுதான் பிள்ளைகளுக்குத் தெரிந்தது. பிள்ளைகள் மனசு பதறுச்சு. என்ன இருந்தாலும் பெற்ற தாய் தகப்பன் இல்லையா?

மருமக்கமார்கள் எங்கனையாவது கிடக்கும்னு எரிச்சலோடு சொன்னாங்க.

ஒரு நாள் ஒரு செய்தி காட்டுத் தீ போல் வந்தது. “கிணத்துல ஒரு தாத்தாவும் பாட்டியும் பொணமா மல்லாக்க மெதக்குறாங்களாம்!”

எல்லோரும் ஓடிப்போய்ப் பார்த்தாங்க. ஆனா இவங்க இல்ல.

பிள்ளைகள் கொஞ்ச நாள் தாய் தகப்பனை ஓடி ஆடித் தேடினார்கள். ஒரு தகவலும் கிடைக்கவில்லை. நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் கண்காணாமல் போய் நாலைஞ்சு வருசமாச்சு, ஊரு மறந்து போச்சு.

ஒருநாள் நேத்திக்கடன் செலுத்தப் பாறைப்பட்டி நாயக்கர் ராமேஸ்வரம் போனார். சாமி கும்பிடுவதற்காகக் கோவிலுக்குப் போனார். கோவில் வாயிலில் இரண்டு பக்கத்திலும் பிச்சைக்காரங்க உட்கார்ந்திருந்தாங்க. பாறைப்பட்டி நாயக்கர் தற்செயலாத் திரும்பிப் பார்த்தார். திகைச்சு நின்னுட்டார். எங்கேயோ பார்த்த முகமா இருக்கேன்னு கவனிச்சார். பதறிப்போனார். அந்தப் பிச்சைக்காரர்கள் வரிசையில் நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் இருந்தாங்க. ரெண்டு பேர் தலையும் மொட்டை போட்டிருக்கு. பாறைப்பட்டியால தாங்க முடியல. தலையில தலையில அடிச்சுக்கிட்டார்; கோன்னு அழுதார்.

வயசாளிகள் இருவரும் அழவில்லை. கண்ணில் இருந்து ஒரு பொட்டுக் கண்ணீர் வரலை. நிம்மாண்டு நாயக்கர் பாறைப்பட்டி நாயக்கரை முன்னப் பின்னத் தெரியாத ஆளைப்பார்ப்பது போல் பார்த்தார்.

பேரக்காளுக்கு பாறைப்பட்டி நாயக்கரை அடையாளம் தெரிந்தது. வாயைத் திறந்து ஒரே ஒரு வார்த்தை மட்டும் பேசினாள்.

“எம்பிள்ளைக எல்லாரும் நல்லா இருக்காகளா?”

**– கி. ராஜநாராயணன்**

- இச்சிறுகதை உன் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தைத் (கதைக்கரு, கதாபாத்திரங்கள், மொழிநடை, உத்தி, கதைச்சூழல் இவற்றின் அடிப்படையில்) திறனாய்வு செய்து கட்டுரை எழுதுக.
- இச்சிறுகதையை நாடகப் பாங்கில் மாற்றியமைத்துப் பள்ளி இலக்கிய மன்ற விழாவில் நடித்துக் காட்டுக.

### பெற்றோரைப் பாதுகாக்கத் தவறினால் சொத்து பறிமுதல் – சிறைத் தண்டனை

**புதிய சட்டம் கேரளாவில் அமலுக்கு வந்தது**

திருவனந்தபுரம், அக்: 22

பெற்றோர் மற்றும் குடும்பத்தின் மூத்தோரைப் பாதுகாக்கத் தவறும் வாரிசுகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் சட்டம் கேரளாவில் அமலுக்கு வந்துள்ளது.

**வாழ்க்கை முறை**

நாகரிகம் வளர, வளர மனிதனின் வாழ்க்கை முறையும் மாறி வருகிறது. கூட்டுக்குடும்பத்துடன் குதூகலமாக வாழ்ந்து வந்த மக்கள் தற்போது, தன்வீடு, தன் மனைவி, தன் மக்கள் எனக் குறுகிய வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதற்குள் சுருங்கி வாழ்ந்து வருகின்றனர்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரையும், மூத்தோரையும் அவர்கள் புறக்கணிப்பதாலேயே இன்று முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன.

இந்த நிலையில், பெற்றோர்களுக்கும், முதியோர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை மத்திய அரசு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

**அமலுக்கு வந்தது**

சிறப்பு மிகுந்த இந்த முதியோர் பாதுகாப்புச் சட்டம் தற்போது கேரளாவில் அமலுக்கு வந்து உள்ளது. அதன்படி பெற்றோர்களுக்கும், குடும்ப முதியோர்களுக்கும் அவர்களின் வாரிசுகள் உரிய முறையில் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு பாதுகாப்பு அளிக்கத் தவறினால் பெற்றோர் மற்றும் குடும்ப முதியோர் வாயிலாக வாரிசுகளுக்குச் செல்லும் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும். பாதிப்புக்குள்ளான நபர்களுக்கே அந்தச் சொத்துகளை அனுபவிக்கும் உரிமை தரப்படும்.

**புகார்**

இது தொடர்பான புகார்களைப் பாதிக்கப்படும் பெற்றோர்கள், மூத்தோர்கள் அல்லது நலவிரும்பிகள் கலெக்டரிடமோ அல்லது தாசில்தாரரிடமோ தரலாம்.

விசாரணை நடத்தப்பட்டு, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சொத்து பறிமுதல் தண்டனை அளிக்கப்படும். மேலும் பெற்றோர் மற்றும் மூத்தோரைப் பாதுகாக்கத் தவறியவர்களிடம் இருந்து மாதந்தோறும் ரூ. 10 ஆயிரம் கோரப்படும். இல்லாவிட்டால் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற நடைமுறையும் புதிய சட்டத்தில் இடம்பெற்று உள்ளது.

**சொத்துகளை விற்கும்படி தாயைக் கொடுமைப்படுத்திய மகன் வீட்டைவிட்டு வெளியேற உத்தரவு**

**நீதிமன்றம் அதிரடி!**

திருவனந்தபுரம், ஆக 1. சொத்துகளை விற்கும்படி வயதான தாயைக் கொடுமைப்படுத்திய மகனையும் அவருடைய குடும்பத்தையும் வீட்டைவிட்டு வெளியேறத் திருவனந்தபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கேரளாவில் திருவனந்தபுரம் அருகே உள்ள குளத்தூர் மண்விளையைச் சேர்ந்தவர் சுமாங்கி (70), இவருக்கு 2 மகள்கள் உட்பட 5 பிள்ளைகள் உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு சுமாங்கியின் கணவர் இறந்து விட்டார். இதையடுத்து, தனது சொத்துகள் அனைத்தையும் மூத்த மகன் பாபுவின் பெயருக்கு மாற்றிய சுமாங்கி, தனது மரணத்துக்குப் பிறகு அவற்றை அனுபவிக்கலாம் எனப் பத்திரத்தில் எழுதினார். இதனால், சுமாங்கியின் வீட்டிலேயே பாபுவும் அவருடைய குடும்பத்தினரும் தங்கினர்.

இந்த நிலையில் சொத்தை விற்பதற்கு ஏற்றபடி பத்திரத்தை மாற்றி எழுதும்படி தாயை பாபு கொடுமைப்படுத்தினார். சில மாதங்களுக்கு முன்பு சுமாங்கியை அடியாட்கள் மூலம் வீட்டைவிட்டு வெளியேற்றவும் முயற்சித்தார்.

இது தொடர்பாகத் திருவனந்தபுரம் குற்றவியல் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாபு மீது சுமாங்கி வழக்குத் தொடர்ந்தார். மனுவில் ‘மூத்த மகன் பாபு என்னைக் கவனிப்பார் என்ற நம்பிக்கையில் அவருடைய பெயருக்குச் சொத்துகளை எழுதி வைத்தேன். ஆனால், இப்போது சொத்துகளை விற்கும்படி என்னைக் கொடுமைப்படுத்துகிறான்’ என்று கூறியிருந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி பஷீர், ‘பாபு தனது குடும்பத்துடன் 15 நாட்களுக்குள் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும்; சுமாங்கியின் செலவுக்கு மாதம் ரூ. 2,000 கொடுக்க வேண்டும்’ என உத்தரவிட்டார்.

‘• முதியோர்கள் சமூகத்தின் ஆணிவேர்கள்’ எனும் தலைப்பில் முதியோர் தினத்தன்று கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்க.

• பிள்ளைகளால் கொடுமைப்படுத்தப்படும் பெற்றோர்களின் பாதுகாப்பிற்காகக் காவல்துறை அதிகாரிக்குப் புகார் கடிதம் ஒன்று எழுதுக.

**புணர்ச்சி**

இருவேறு சொற்கள் ஒன்றாக இணைந்து வருவதைப் புணர்ச்சி என்பர்.
எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| மலர் + வனம் | = | மலர்வனம் |
| பட்டு + சேலை | = | பட்டுச்சேலை |
| பல் + பசை | = | பற்பசை |
| படம் + விழா | = | படவிழா |

எடுத்துக்காட்டுகளைப் படித்தீர்களா? என்ன தெரிந்துகொண்டீர்கள்? முதல் எடுத்துக்காட்டில் இரண்டு சொற்களுக்கும் இடையே எவ்வித மாற்றமும் ஏற்படாமல் அவை இயல்பாகவே இணைந்துள்ளன. இவ்வாறு மாற்றங்களுக்கு உட்படாத புணர்ச்சியை ‘இயல்பு புணர்ச்சி’ என்பர். இயல்பு புணர்ச்சிக்கு மேலும் சில எடுத்துக் காட்டுகள்:

| | | |
|---|---|---|
| பனை + மரம் | = | பனைமரம் |
| கண் + மணி | = | கண்மணி |
| தமிழ் + மொழி | = | தமிழ்மொழி |

புணர்ச்சியின்போது சொற்களுக்கு இடையே ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமானால் அதனை ‘விகாரப் புணர்ச்சி’ என்பர். இம்மாற்றம் அல்லது விகாரம் மூன்று நிலைகளில் அமையும். அவையாவன தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவாகும்.

**தோன்றல்**

இணையும் சொற்களுக்கு இடையே புதிதாக ஒரு எழுத்துத் தோன்றுமானால் அது தோன்றல் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| கோழி + குஞ்சு | = | கோழிக்குஞ்சு |
| பூ + சோலை | = | பூஞ்சோலை |
| கணக்கு + புத்தகம் | = | கணக்குப்புத்தகம் |

**திரிதல்**

இணையும் சொற்களுக்கு இடையே உள்ள ஓர் எழுத்து இன்னொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| பல் + பொடி | = | பற்பொடி |
| முள் + புதர் | = | முட்புதர் |
| மண் + குடம் | = | மட்குடம் |

**கெடுதல்**

இணையும் சொற்களுக்கு இடையே உள்ள ஓர் எழுத்து கெடுமானால் அது கெடுதல் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| மரம் + வீடு | = | மரவீடு |
| மணம் + மாலை | = | மணமாலை |

• பாடப்பகுதியிலிருந்து இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் புணர்ச்சிகளுக்கான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

# 3

# நலவாழ்வு

# போதை - நரகம்

## அன்புடன் அம்மா

அருமை மகனே,

உன்னுடைய கடிதம் கிடைத்து மூன்று வாரங்களாகிவிட்டன. அம்மா உன் பதிலுக்காகக் காத்திருக்கிறாள். அந்த மாநகரில் நீ தனித்தல்லவோ இருக்கிறாய்?

குறிப்பிடத்தக்க ஒரு காரியம் நேற்று நிகழ்ந்தது. அது என்னை மிகவும் சஞ்சலப்படுத்துகிறது. ஒரு தோழிக்காக மனநலமருத்துவமனை மருத்துவரிடம் சில காரியங்களைக் கேட்டறிவதற்காக நாங்கள் நேற்று அங்கே போனோம். வார்டில் மருத்துவர் இருந்தார். அவரைச் சந்தித்துவிட்டு நாங்கள் திரும்பி வரும் வேளையில் வரிசைவரிசையாக உள்ள அறைகளிலிருந்து எழும் கூச்சலையும் புலம்பலையும் சிரிப்பையும் அழுகையையும் கேட்டுக்கொண்டே விரைந்து வெளியேறும்போது திடீரென்று, “அம்மா! அம்மா!” என்று ஓங்கிய குரலில் ஓர் அழைப்பு! நான் திடுக்கிட்டுப் போனேன். மகனே, அது உன் குரலாக இருந்ததோ?

அக்குரல் வந்த திசைநோக்கி அவனருகே ஓடிச்சென்றேன். கம்பிகளைப் பிடித்துக்கொண்டு அவன் நின்றிருந்தான். வெளுத்து நிமிர்ந்த ஒரு பதினெட்டு வயது இளைஞன். உன்னைப் போன்ற உருவம். அதே நீண்டு சுருண்ட முடியும் அதே முகத்தோற்றமும். ஆனால் கண்கள் மட்டும் குழிவிழுந்து சூன்யமாக நெஞ்சக்கூடு வெளியே தெரிய பரவசத்தோடு அழுக்குப் படிந்த அவன், கம்பிகளுக்கிடையே கைகள் இரண்டையும் நீட்டி உச்சத்தில் அழுதுகொண்டே என்னை அழைத்தான். – “அம்மா! அம்மா! போகாதீங்க என்னை இங்கே விட்டுவிட்டுப் போகாதீங்க”.

நீட்டிய அக்கரங்களை நான் பிடித்தேன் “அழாதே மகனே அழாதே!” என்று சமாதானப் படுத்தினேன் – “என் மகனுக்கு என்ன நேர்ந்தது?” என்று வினவினேன். அவன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னான். “அம்மா, மதுவும் போதைப் பொருட்களும் என்னை இங்கே கொண்டு வந்தது” அவன் ஏங்கிஏங்கி அழத்தொடங்கினான். அறையில் உள்ள பிற நோயாளிகள் அவனைத் திட்டினர். அங்கேயிருந்த ஒரு மருத்துவ ஊழியர் சொன்னார்:

“இப்பையன் பொறியியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். நல்ல பாடகன். ஆசிரியர் களுக்கும் பிற மாணவர்களுக்கும் மிகவும் பிடித்தமானவன். ம்..... எல்லாவற்றையும் தொலைத் தான். இவனைப் போன்றவர்கள் எல்லாம் முதலில் ஒரு வேடிக்கையாகக் கருதித் தொடங்குகிறார் கள். பிறகு வேறு வழியில்லாமல் மாட்டிக்கொள்கிறார்கள்”. திடீரென்று அவன் முக பாவனை மாறியதைக் கவனித்தேன். அழுகை நின்றது. பேய் பிடித்தவன் போல அலறிக்கொண்டே அவன் அறையின் இரும்புக் கம்பிகளின்மீது தன் தலையால் ஓங்கி இடிக்கத் தொடங்கினான். “அப்படிச் செய்யாதே!” என்று உச்சத்தில் நான் அலறுவதை அவன் கேட்கவில்லை. மருத்துவ ஊழியர்கள் என்னை அங்கிருந்து வெளியேறச் செய்தார்கள். மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தபோதும் அவனது அலறல் சத்தம் எனக்குக் கேட்டுக்கொண்டேயிருந்தது. “அம்மா! அம்மா! போகாதீங்க.

என்னால் இங்கிருக்க முடியவில்லை. தலையில் தீ பிடிக்கிறது தீ! தீ! ஐயோ! ஒருமுறை, ஒரே ஒருமுறை போதும். ப்ளீஸ், அந்த ஊசியைத் தாருங்கள் அம்மா!" காதுகளைப் பொத்திக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

அருமை மகனே! உன்னைப் போலொரு மகனே அவன். பதினெட்டு வயதில் எல்லா வீரமும், குறும்பும் நிறைந்த ஒரு திறமைசாலி. அப்பா அம்மாவால் எவ்வளவோ கனவுகளுடன் செல்லமாக வளர்க்கப்பட்டவன். திறமையின் அடிப்படையில் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தவன். நாளை அபிமானத்துடன் வெற்றி பெற்று எல்லோரும் போற்றும் வகையில் தொண்டாற்ற வேண்டியவன் இதோ, இன்று... சுருண்ட முடி சடைபிடித்து, இரத்தம் வடிந்து, எலும்பும் தோலுமாய், கிழிந்து தொங்கும் வேட்டியும் உடுத்து, மனநல மருத்துவமனையில் கம்பிகளைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டு அலறிக் கொண்டே நிற்கிறான்.

இந்த இளைஞனைப் போல ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள். மகனே! முதலில் இதன் தொடக்கம் புகை பிடிப்பதில்! 'தான் ஒரு குழந்தையல்ல, சொந்த விருப் பின்படி நடக்கும் ஓர் ஆண் மகன்' என்ற நினைப்பே இதன் தொடக்கம். விளம்பரங்களில் தோன் றும் அழகர்களையும் வீரர்களையும் பின்பற்ற, புகையிலையின் நஞ்சு, மூச்சுக்குழல்களை அரித்து விடுமென்று சொன்னாலும் மதிப்பதில்லை.

தொடக்கம் புகை பிடித்தலிலிருந்துதான் வருகிறது என்று சொன்னேனல்லவா? அதன் பிறகு அது மதுவாக மாறும். பெரிய பெரிய உணவுவிடுதிகளுக்குச் செல்கிறார்கள். நுரை ததும்பும் குவளை ஒன்றைக் கையில் பிடித்து உரையாடிக்கொண்டிருக்கும்போது, தான் ஒரு பெரிய மனிதன் என்ற தோரணை வந்துவிடுகிறது. புகை பிடித்தலும் மதுவும் தருகின்ற போதை போதாது என்ற நிலை வருகிறது. ஓர் ஆர்வத்தின் காரணமாக மெல்ல மெல்ல கஞ்சா மற்றும் போதைப் பொருள்களின் உலகத்திற்கு நகரத் தொடங்குகிறான்.

ஒரு பேயின் குரூரத்தன்மைபோல அவை உங்களை அடிமைப்படுத்துகிறது. புகையாகவும், மதுவாகவும் குத்திக்கொள்ளுதலுமாக அந்நஞ்சு உள்ளே புகத் தொடங்கினால் பின் மெல்ல மெல்ல பைத்தியமாகத் தொடங்கும். அவை கிடைப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எங்கிருந்தும் திருடுவார்கள். நம்பமுடியவில்லை அல்லவா? உண்மைதான். வேண்டுமானால் யாரையும் கொலை செய்வார்கள். எந்தவிதமான குற்றங்களையும் செய்யத் தயங்கமாட்டார்கள். சட்டங்களும், மரியாதைகளும், கொள்கைப் பிடிப்பும் காற்றில் பறக்கும். போதைப் பொருளின் – மதுவின் – அடிமையாகிறான். பின் அவனுக்குரிய ஓர் அதலபாதாளத்தில் மூழ்கிப்போகிறான்.

இவனைப் போன்ற இளைஞர்களை அழிப்பது யார்? பெரும் முதலாளிகளே! போதைப் பொருளை விற்றுப் பணம் பெருக்கும் மொத்த வியாபாரிகளும், வெளிநாட்டுக் கள்ளக் கடத்தல் கும்பல்களுமே. அரசாங்கமும், காவல்துறையும் இவர்களின் இரகசிய சக்திகளுக்கு முன்னால் எதுவும் செய்ய இயலாதவர்களாக உள்ளனர்.

மகனே!, மது மற்றும் புகைபிடித்தல் பற்றிய படங்களும் விளம்பரங்களும் சேர்ந்து நம்முடைய வாழ்க்கையை மூழ்கடித்து விடுகின்றன. நீங்கள் பச்சைக் குழந்தைகள், நீங்கள் நடக்கின்ற பாதைகளில் எல்லாம் சதிக்குழிகளே உள்ளன. உங்களைக் காப்பாற்ற வேறு யாராலும் முடியாது. குழந்தாய்! அப்பா அம்மாக்களாலோ, ஆசிரியர்களாலோ, ஆட்சியாளர்களாலோ முடியாது. உங்களைக் காப்பாற்றிக் கொள்ள உங்களால் மட்டுமே முடியும். அம்மா, எங்கேயோ வாசித்தேன் போதையூட்டும் மருந்தைக் குத்தி வைத்து குத்தி வைத்து ஒரு வரம்பு கழிந்தால் அப்புறம் பாம்பின் நச்சை வைத்துக் கொத்தச் செய்வது வழக்கமாம். அந்நஞ்சால் மட்டுமே மனச் சஞ்சலத்திலிருந்து தற்காலிகமான நிம்மதி தர இயலும்!

உன்னுடைய தலைமுறை இந்த அளவுக்கு மூடர்களாகி விடக் கூடாதல்லவா? மகனே! தானே தன்னை அழித்துக் கொள்வது என்ற பாதையில் இழுத்து இழுத்து நடக்கக்கூடாது. இந்தியாவின் 20 சதவிகிதம் சிறுவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமைகளாகி விட்டார்கள் என்பது அரசாங்கக் கணக்கு, நினைத்துப்பார். உன்னைப் போல அழகான குழந்தைகள் அறிவில் மந்த நிலையும், வயிற்றில் வேதனையும், தளர்ச்சியும், ஈரலில் வீக்கமும் அப்புறம் மெல்ல மெல்ல நடுக்கமும், சஞ்சலமும் ஏற்பட்டுச் சமூகப் பகைவராய், குற்றவாளிகளாய், கொடிய நோயாளிகளாய் அங்குமிங்குமாய் இறந்துபோகிறார்கள். இவையெல்லாம் தற்காலிகமாய்க் கூட்டுச் சேர்ந்திருக்கும், வெறும் பொழுதுபோக்கிலிருந்தே தொடங்குகிறது. அப்பொழுதுபோக்கிலிருந்து தப்பிப் பிழைக்க முயற்சி செய்யும்பொழுது .... அதற்குள்ளாகக் கழுத்தில் கயிறு இறுகி முறுகியிருக்கும்.

மகனே! நிமிர்ந்த முதுகெலும்புடன் தலையெடுப்புடன் தெளிவான அறிவுடன் தூயவனாய், தன்மானமுள்ளவனாய் வளர்ந்துவர என்னுடைய குழந்தையால் இயலட்டும்! அதைக் காண்பதற்குரிய அரும்பேறு உன் அம்மாவிற்கும் உன்னைப் பெற்ற நாட்டிற்கும் உண்டாகட்டும்! இதுவே என்னுடைய பிரார்த்தனை.

இப்படிக்கு,

அன்புடன் அம்மா

**– கவிஞர் சுகதகுமாரி**
**(தமிழில் தக்கலைத்தம்பி)**

- கடிதத்தின் அடிப்படையில் மகன் தன் தாய்க்கு எழுதும் பதில் கடிதம் ஒன்று தயார் செய்.
- பின்வரும் மலையாளத்தொடர்களைத் தமிழாக்கம் செய்தபின் பாடப்பகுதியில் அத்தொடர்கள் சரியாக மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளனவா என்று பொருத்திப்பாருங்கள்.
  - 'என்றெ குட்டிக்கு எந்து பற்றி?'
  - 'மயக்கு மருந்தின்றே மத்யத்தின்றேஅடிம'
  - 'நின்றே தலமுற இத்ற விட்டிகளாயிக்கூடா'

# மினி பீரங்கி

இந்த சிகரெட்
ஓர் அதிசயப் பிறவி – ஆம்
வெள்ளைப் பிறவி
இதன்மீது சவாரி செய்பவனை
மரணக்குழியில் தள்ளும்
ஓர் அதிசயப் பிறவி!

இது பெட்டியில் இருந்து
வெளிவரும் போதே – இதை
முத்தமிடுபவனுக்கு ஒரு
சவப்பெட்டி தயாராகி விடுகிறது
சிகரெட் ஒரு
மினி பீரங்கி – இது
பகைவனை அழிப்பதற்காகப்
பயன்படுத்தப்படுவதில்லை
கைபிடித்தவனையே
அழிக்கும் கலையில்
ஈடு இணையற்றது இது.

எழுத்தாளன் என்பவனை
இனிதே அழைத்து - ரத்த
அழுத்தத்தில் அமிழ்த்திடும்
ஆகாய மோகினி.
வாயில் புகைந்து
மறுபடி மயான
வாயிலில் புகைந்து
மடக்கும் கொள்ளிவாய்.
பெட்டிப் பாம்பு அல்ல
பிடிப்பவன் உடலைக்
கட்டையில் எரிக்கும்
கட்டு விரியன்.
இதைத் தொட்டவர் போவது
கட்டையில் - எனினும் இதை
விட்டவர் வாழ்வில்
விவேகம் தழைக்கும்

**- சக்திக்கனல்**

- ‘குடி குடியைக் கெடுக்கும்’-என்னும் கருத்தின்அடிப்படையில் குறுங்கவிதைகள் எழுதுக.

# முக்கூடற்பள்ளு

கட்டின மாட்டைத்-தொட்டவிழான் ஒருக்
காலுந் தான்உழக் கோலுங்கை தீண்டான்
தொட்டியர் காளை-மட்டிபோல் வெந்துநான்
சோறிட்டாலுங்கண்-ஏறிட்டும் பாரான்
வட்டில் வாய்வைக்குஞ்-சட்டி கொண்டோங்கும்
மருதூராளே - விருதுக்கே வைத்தான்
பெட்டி யால்வாரிப்-பட்டடை நெல்லெல்லாம்
பேய்த் தண்ணீருக்குத் - தேய்த்தான்
காணாண்டே.

- பாடலின் கருத்து, வடிவம், ஓசை ஆகியவற்றின் அடிப்படையில் நயம் பாராட்டுக.

# குடி குடியைக் கெடுக்கும்

## அறுவடைக் காலம்

அல்லு பகல் உழைப்பவள
அடிக்க கைய நீட்டாதய்யா,,,,,,
சீக்கிரமாச் சமச்சித்தாரேன்
சிடு சிடுன்னு பேசாதய்யா

கழுத்தக்கட்டி தூங்குகிற
கண்மணிக்கு ஆதரவா
துணிமூட்டத் தலயணய
துணையாக சேத்து வச்சி
உங்களுக்கு முன்னெழுந்து
உழைப்பவள வையாதய்யா,,,,,,,,,,

கஞ்சி கொஞ்சம் ஊத்திகிட்டு
கதிரறுக்கப் போகும்போது
கோழி கூட கூவதில்ல
கொடுமய நான் என்ன சொல்ல?
கொட்டுகிற பனியிலே
குனிஞ்சு அறுக்கயில
அடிவயிறும் நடுங்குதய்யா
ஆரிடத்தில் இதைச் சொல்ல?

காலையில போகயில
கஞ்சி தண்ணி குடிச்சானோ
பள்ளிக்கூடம் போன மகன்
பத்திரமா இருப்பானோ
கண்ணான அவன எண்ணி
கண்ணும் தண்ணி வடிக்குதய்யா,,,,,,,
களத்துல கட்டுடைத்துடச்சி

கச்சிதமா நெல்உதிர்த்து
காத்துவரும் நேரம்பாத்து
தூத்தி முடிக்கு முன்னே
கண்ணுல விழுந்த தூச
நின்னெடுக்க நேரமேது?

கொட்டி குமிஞ்ச நெல்லில்
கொடுத்த கூலி வாங்கிகிட்டு
குறுகலான வரப்பு வழி,,,,,
கூலி நெல்லத் தூக்கிகிட்டு
எட்டு அடி வச்சும்,,,,,,
எட்டு மணி ஆச்சுதய்யா,,,,,
பச்சவெறகு பத்த நேரமாகுதய்யா,,,,,
கண்ணு கலங்குதய்யா,,,,,
கைநீட்ட நியாயமுண்டா?

உழைச்சதால உனக்கு மட்டும்
உடம்பு வலி தாங்கலேனு
ஊத்திகிட்டு சாராயத்த,,,,
அல்லு பகல் உழைப்பவள
அடிக்க கைய நீட்டாதய்யா,,,,,
சீக்கிரமா சமச்சித்தாரேன்
சிடு சிடுன்னு பேசாதாய்யா

**- இளம்பிறை**

- போதைப் பொருட்களின் பயன்பாட்டால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண் களும் குழந்தைகளுமே' - கலந்துரை யாடுக.

# புதுக்குறள்

புகைமது கஞ்சா மயங்குறு மாந்தன்
பகையின்றி மாய்வான் புகைந்து.

புகையுண்டான் நாடொறும் நஞ்சுண்பான் நல்லூன்
தொகையாகு நோயே தெளி.

புகைக்கும் பழக்கம் சிறிதுபெரி தாய்நோய்க்
குகைக்குள் புகுத்தும் பகை.

மதியைக் கெடுக்கும் மதுவால் குடும்ப
நிதியைக் கெடுப்பான் குடித்து.

கஞ்சா பகைவர்க்கு மஞ்சா ஒருவனை மாம்
பிஞ்சா வதைக்கும் வெயில்.

**-முனைவர் த.கோடப்பிள்ளை**

- போதைப் பழக்கத்திற்கு எதிரான பொன்மொழிகள், புதுக்குறள்கள் எழுதுக.

# குடியின் விளைவுகள்

குடியினால் வரும் தலையாய கேடுகளுள் ஒன்று குடிப்போர் தன் மதிப்பை இழத்தலாகும். சமூகத்தில் இழிநிலையில் கருதப்பட்டுப் பலராலும் தூற்றலுக்கு ஆளாகின்றனர். கள்ளுண்பதைத் திருவள்ளுவர் கடிந்தார் என்பதைவிடச் சமூகக் கேட்டினை மையமாகக் கொண்டே வள்ளுவர் அதனை வெறுத்தொதுக்குகின்றார் என்பது பெரிதும் பொருந்தும். இது குறித்து, டாக்டர் மு.வ. அவர்கள் பின்வருமாறு கருத்துரைப்பார். திருவள்ளுவர் காலத்திற்கு முன் சமயத்தின் செல்வாக்குக் குறைவு என்றும் அவர் காலத்தில்தான் அதுமிகுதியாயிற்று என்றும், அதனால் மற்றவர்கள் கடியாத கள்ளை அவர் கடியத் தொடங்கினார் என்றும் கூறுவார்கள். அது உண்மையானால் கள் குடிப்பது பாவம் என்றாவது, நரகத்திற்குக் காரணம் என்றாவது கூறியிருக்க வேண்டும். அவ்வாறு ஒரு குறிப்பும் கூறவில்லை. பிறரிடம் மதிப்பு இழக்க நேரும் என்றும், சான்றோரின் தொடர்பு போய்விடும் என்றும் அறிவு மயங்கும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றாரே அல்லாமல் வேறு வகையால் கடிந்து அறிவுறுத்தவில்லை.

### மதிப்பின்மை

சமூகத்தின் பெருஞ் செல்வாக்குப் பெற்று விளங்கியவர்களும்கூட அவர்தம் குடிப்பழக்கத்தால் மதிப்பிழந்து செல்லாக்காசாகின்ற நிலையை இன்றும் நாம் வாழ்வில் காணுகின்றோம். குடிப்பழக்கம் உடைய நாட்டில் கூட அரசு அதிகாரிகள் பிறநாட்டு விருந்தினர் தம் நாட்டிற்கு வரும்போது அவர்கள் முன்னிலையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும்




குடியினால் தம் நாட்டு மதிப்பும் மானமும் இழக்கா வண்ணம் நடந்து கொள்ள வேண்டிய தையும் ஆணைமூலம் அறிவுறுத்தியுள்ளதை யும் அறியலாம். சமூக மதிப்பின் கேட்டிற்கு இவர்கள் காரணமாதல் கூடாது என்பது இதன் மூலம் தெளிவுறும்.

### பெருமையழிதல்

சமூகக் கேடு மட்டுமின்றிக் கள்ளுண்பா ரின் தீயபழக்கத்தால் அவர்தம் பொருளாதார நிலையும் தாழ்வுறும். மானமிழந்து மதிகெட்டுப் போன திசை எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப் பும் தீயனாய் மாற்றும் இழிநிலைக்கு இட்டுச் செல்லும்.

இந்திய மக்களின் வாழ்வு மறுமலர்ச்சி பெறவேண்டுமானால் மது அருந்தும் கொடிய பழக்கத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என எண்ணி அண்ணல் காந்தியடிகள் ஓர் இயக் கத்தையே தொடங்கினார். மதுவிலக்குப் பிரச் சாரத்தைத் தீவிரமாக நடத்தினார்.

அரசு மட்டுமின்றி மக்களும் உண்மை யான மனமாற்றத்தைக் கொண்டாலொழிய இத் தீய பழக்கத்தினின்றும் நாடு விடுபடாது. எனவே அக்கால கட்டத்தில் தோன்றிய சிறு கதைகளும் நாவல்களும், மதுவிலக்குக் கொள்கையை ஒட்டி அமைந்தன. இராஜாஜி, பெ. தூரன் முதலானோர் மதுவை விலக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும், சமூகப் பொருளதார நலன்களைச் சிந்தித்தும் சிறுகதைகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கினர். இராஜாஜியின் ‘திக்கற்றபார்வதி’, ஜெயராமன், தேவானை, பெ.தூரனின் ‘ரங்கபோயன், புதுக்கடை, குப்பன், முத்தம்மாள், கடையின் கவர்ச்சி’ முதலிய கதைகள் மதுவின் தீமையை நன்கு வெளிப்படுத்துகின்றன.

குடியின் கொடுமை குறித்து எழுதிய நாவல்களும் பல. முதன் முதலாக மதுவிலக்கு - குடும்ப அளவிலாவது வர வேண்டும் என்னும் எண்ணத்தை வலியுறுத்திய நாவலாக 1912 இல் வெளியான ‘காதற் பெருமையும் கடுங்குடிச் சிறு மையும் அல்லது கிருபாம்பிகை’ என்னும் நாவ லைக் குறிப்பிடுவர். குடி எப்படி குடும்பத்தைக்

கெடுக்கிறது, அதை எதிர்த்துப் படித்த பெண் எப்படி கணவனைத் திருத்த முற்படுகிறாள் என்பதைப் படிப்போர் கண்ணில் கண்ணீர் வரும் வகையில் இந்நாவல் சொல்லிச்செல்கிறது. எனவே குடியினால் ஏற்படும் விளைவுகள் குறித்துச் சிறுகதைகளும் நாவல்களும் இன்றும் எழுதப்பட்டு வருகின்றன. சமூகச் சிக்கலாக மலர்ந்த இக்குடிப்பழக்கத்தினை ஒழிப்பதற்கு மனிதச் சிந்தனைகள் அனைத்தும் பயன்படும் பான்மை இவ்வகை முயற்சிகளால் தெளிவுறும்.

### இன்றைய நிலை

இறந்த பின்னரும்கூட இந்தக் கொடிய மதுப் பழக்கம் மக்களைவிட்டு அகலவில்லை என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் இன்றைய கவிஞர். அந்த அளவிற்குச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்றது மதுவின் மணம். அப்பாடல் வருமாறு:

**குடியின் விளைவுகள்**
**சீதக்காதியைப் போல**
**ஒரு**
**கை**
**நீண்டது**
**அந்தச்**
**சமாதியில்**
**இருந்து -**
**எவனோ**
**சாராய**
**பாட்டில்களை**
**அங்கே**
**புதைத்துக்**
**கொண்டிருந்தபோது!**

**- கணியூர் மதுநெஞ்சன்**

இந்த இழிநிலை மாறுவதற்கு இன்னும் நாம் தொண்டாற்ற வேண்டும்.

### சிலசொற்கள்

சான்றோராலும், மக்களாலும் நன்கு மதிக்கத்தக்கவர்களாய் நடந்துகொள்ளவேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? வள்ளுவர் தரும் வாழ்வியல் நெறி இதுதான்.

**உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்** (குறள் : 922)

கள்ளை உண்ணக் கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம் என்பது மு.வ. அவர்களின் தெளிவுரை.

**- டாக்டர் இ.சுந்தரமூர்த்தி**
**(இலக்கியமும் பண்பாடும்)**

- மது மற்றும் போதைப் பொருள்களின் விளைவால் ஏற்படும் தீமைகளை விளக்கும் பத்திரிகைச் செய்திகள், கேலிச்சித்திரங்கள், புகைப்படங்கள் முதலானவற்றைத் திரட்டி விழிப்புணர்வுக் கண்காட்சி நடத்துக.

# மாலுமியில்லாத மரக்கலம்

## மணிமேகலையும் மதுவிலக்கும்

இயற்கை வளம் நிறைந்த தமிழ் நாட்டில் பனையும் தென்னையும் பல்லாயிரம் உண்டு. பாண்டியநாடு தொன்று தொட்டுப் பனைவளம் படைத்ததாகும். சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் தென்னைச் செல்வம் சிறந்து விளங்குகின்றது. தென்னையிலும் பனையிலும் ஊறுகின்ற மது ஆறாகப் பாய்வதற்குப் போதியதாகும். ஆயினும், தென்னாட்டில் பிறந்த சமயங்களும், புகுந்த சமயங்களும் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தன. சைவமும் வைணவமும் பௌத்தமும் சமணமும் மகம்மதியமும் கிருஸ்தவமும் மதுபானத்தைக் கடிந்தன. மற்றைய கொள்கைகளில் பிணக்கமுற்ற இப்பெருஞ் சமயங்கள் மதுவிலக்குக் கொள்கைகளில் இணக்க முற்றும் பணிசெய்த பான்மையிலேயே தமிழ்நாட்டில் மது பானம் மட்டுப்படுவதாயிற்று.

தமிழ்மொழியில் இறவாத பெருநூல்கள் இயற்றிய பேரறிவாளரும் தம் கவிகளின் வாயிலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்துள்ளார்கள். தமிழ்மறையென்று தமிழ் நாட்டார் போற்றும் திருக்குறள், மனித சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கும் மூன்று தீமைகளை மிக அழுத்தமாகக் கண்டிக்கிறது. விபச்சாரம், மதுபானம், சூதாட்டம் இம்மூன்றும் செல்வத்தைச் சிதைத்துச் சீர்மையை அழிக்கும் என்று அந்நூல் கூறுகின்றது.

**இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப்பட்டார் தொடர்பு**

என்பது வள்ளுவர் வாய்மொழி.

சமண முனிவராகிய பவணந்தியார், நன்னூல் என்னும் இலக்கண நூலின் வாயிலாக மதுவிலக்கு பிரச்சாரம் செய்கின்றார். கள்ளுண்பவர் கல்வியறிவைப் பெறுவதற்கு உரியரல்லர் என்பது அவர் கொள்கை. களி, மடி, மானி, காமி, கள்வன் முதலியவர்கள் கல்வி பெறுதற்குரியராகார் என்று ஆசிரியர் கட்டுரைக்கின்றார். கள்ளுண்பவன் 'களி' எனப்படுவான். மாணவராதற்குத் தகுதியற்றவர்களில் முதல் வரிசையில் முதலாகக் கள்ளுண்பவனை வைத்தமையால் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் நன்னூலார்க்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது நன்று விளங்குகின்றதன்றோ?

பௌத்த சமயத்தைச் சார்ந்த நூல் மணிமேகலை. அந்நூல் ஐந்து சிறந்த கொள்கைகளைப் பஞ்சசீலம் எனப் பாராட்டுகின்றது. பஞ்சசீலம் வாய்ந்தோரே சிறந்தோர் ஆவர். கள்ளுண்ணாமை, பொய்யுரையாமை, கொலை செய்யாமை, களவு செய்யாமை, விபச்சாரம் செய்யாமை ஆகிய ஐந்தும் பஞ்சசீலம் எனப்படும்.

இனி, மணிமேகலையில் அமைந்த மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பார்ப்போம். சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் ஆடல், பாடல், அழகு என்னும் மூன்று நலங்களும் ஒருங்கே வாய்ந்து, கோவலனைக் காதலனாகப் பெற்ற மாதவியின் மகளாய் மணிமேகலை தோன்றினாள். கோவலன் தன் குல தெய்வத்தின் பெயரைத் தன் காதல் மகளுக்கு இட்டு மகிழ்ந்தான். மதுரையில் கோவலன் கொலையுண்டு இறந்த கொடுமையை அறிந்த மாதவி துறவறத்தை மேற்கொண்டாள். அவளோடு பருவ மங்கையாகிய மணிமேகலையும் தன் கருங்குழல் களைந்து துறவற நெறியிற் சேர்ந்தாள். இருவரும் அறவண அடிகள் என்னும்

பெரியவரிடம் ஞானோபதேசம் பெற்றார்கள். மணிமேகலை தனக்கென வாழாது சமுதாயத்தின் நலத்திற்காகத் தன்னலத்தைத் தியாகம் செய்த தவநங்கை; சமுதாயத்தை அலைத்துக் குலைத்து அழிக்கும் நோய் பசிநோயே யாதலால் அந்நோயை நீக்கும் முயற்சியை மேற்கொண்டாள். அவள் கையில் அமுத சுரபி என்னும் திருவோடு வந்து சேர்ந்தது. அத்திருவோட்டில் முதன் முதல் கற்புடைய மங்கை ஒருத்தி தன் கையால் அன்னமிட்டால், அவ்வன்னம் அள்ள அள்ளக் குறையாமல் வளரும் என்று மணி மேகலை அறிந்தாள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த ஆதிரை என்னும் நல்லாளே கற்பின் செல்வி என்று எல்லோரும் எடுத்துரைத்தார்கள். அவள், கணவனே தெய்வம் என்று கருதி வாழ்ந்த கற்புடையாள்; திருவாதிரை நாளில் பிறந்தமையால் அப்பெயர் பெற்றாள் போலும். அம்மங்கையின் மனைமுற்றத்திற் போந்து, மணிமேகலை திருவோடேந்திப் புனையா ஓவியம்போல நின்றாள். ஆதிரை அன்போடு அன்னமெடுத்துவந்து மணிமேகலையை வலம் வந்து தொழுது, 'பாரெங்கும் பசிப்பிணி ஒழிக' எனத் திருவோட்டை வாழ்த்தி அதன் சுரை நிறைய அன்னமிட்டாள். இங்ஙனம் பசியைச் சபித்த பாவையின் திறத்தினை,

**பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென**
**ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து**

என்று மணிமேகலை போற்றுகின்றது.

பசிப்பிணியென்னும் பாவியை இப்பாரினின்று ஒழிக்க முயன்றாள் ஆதிரை; அவள் கணவனான சாதுவன், மது என்னும் அரக்கனை இம்மாநிலத்தினின்றும் அகற்ற முயன்றான். ஒரு நாள், கப்பலேறி வங்க நாட்டுக்குப் புறப்பட்டான். நடுக்கடலிற் கப்பல் செல்லும்பொழுது ஒரு சுழல் காற்று எழுந்தது. மரக்கலம் சின்னாபின்னமாகச் சிதைந்து தாழ்ந்தது. கருங்கடலில் மிதந்த சாதுவன் கையில் ஒரு பாய்மரம் அகப்பட்டது. சில நாள், இரவு பகலாக அலைகளால் மொத்துண்டு அலைந்த அம்மரம், ஒரு தீவிலே அவனைக் கொண்டு சேர்த்தது. அங்கே, நாகர் என்னும் வகுப்பார் வாழ்ந்து வந்தார்கள். விலங்குகளுக்கும் அவர்களுக்கும் வேற்றுமை இல்லை. தம்முள் ஒருவனைத் தலைவனாகவும் குருவாகவும் அவர்கள் கொண்டிருந்தார்கள். அவன் ஆண் கரடி போன்றவன். அவன் மனையாள் பெண்கரடி போன்றவள். கரையிலே ஒதுக்கப்பட்ட சாதுவனை நாகர் சிலர் கண்டார்கள். நரமாமிசம் கிடைத்ததென்று நாக்கு ஊறினார்கள். தன் குருநாதனிடம் அவனைக் கொண்டு சென்றார்கள். பசியால் மெலிந்து, குளிரால் நலிந்த சாதுவனைக் குருநாதன் கூர்ந்து நோக்கினான்; "நீ யார்? இங்கு வந்த காரணம் என்னை?" என்று நாக நாட்டு மொழியிலே வினவினான்.

அம்மொழியை அறிந்திருந்த சாதுவன் கருங்கடலில் நேர்ந்த துன்பத்தை உருக்கமாக எடுத்துரைத்தான். அருந்துயருற்ற நம்பிக்கு நாட்பட்ட கள்ளும் நல்ல ஊனும் கொடுக்கும்படி அவன் அருகே நின்ற நாகரைப் பணித்தான். அவ்வுரை கேட்ட சாதுவன் திடுக்கிட்டான். இரு கையாலும் செவியைப் பொத்திக் கொண்டு "ஐயனே! கள்ளும் ஊனும் வேண்டேன்" என்று உறுதியாக உரைத்தான். அவ்வுரை கேட்ட குருநாதன் வியப்படைந்தான். ''கள் என்ற சொல்லைக் கேட்டபொழுது துள்ளி மகிழாத உள்ளமும் உண்டோ? நாவுக்கினிய ஊனையும், கவலையை ஒழிக்கும் கள்ளையும் விலக்கலாமோ?" என்று வெகுண்டு வினவினான். இது கேட்ட சாதுவன் மதுபானத்தின் தீமையைக் குருநாதன் மனங்கொள்ள உணர்த்தலுற்றான்; ஐயனே! மானிடப் பிறவியில் நாம் அடைந்துள்ள செல்வங்களுள் எல்லாம் சிறந்தது அறிவுச் செல்வமே ஆகும். அவ்வறிவாலேயே நன்மை தீமைகள், குற்ற நற்றங்கள் இவற்றைப் பகுத்து உணர்கின்றோம். இத்தகைய அறிவை வளர்க்கின்றவர்களே மேலோர்; அதனைக் கெடுக்கின்றவர் கீழோராவர். மதுபானம் நம் அறிவை மயக்குகின்றது. நாளடைவில் அதனைக் கெடுத்துவிடுகின்றது. செய்யத்தக்கது இது. செய்யத்தகாதது இது என்று பகுத்தறியும் திறமையை இழந்துவிட்டால் மாலுமியில்லாத மரக்கலம் போல நமது

வாழ்க்கை நெறிகெட்டொழியும். இதனாலேயே.

**மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்**
**நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்**
**அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்**
**உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்**

என்று சாதுவன் எடுத்துரைத்தான்.

உயிர்க்குறுதி பயக்கும் உண்மைகளைச் சாதுவன் வாயிலாகக் கேட்ட நாகர் தலைவன் அவனடிகளில் வீழ்ந்து வணங்கினான்; அதுவரை, கடலிற் கவிழ்ந்த மரக்கலங்களிலிருந்து கைப்பற்றிய அரும்பெரும் பொருள்களை அவனுக்குக் கையுறையாகக் கொடுத்தான். வங்க நாட்டினின்றும் அங்கு வந்தடைந்த வாணிகக் கப்பலில் அவனை ஏற்றி அனுப்பினான்.

ஆகவே, மதுவிலக்குப் பிரச்சாரம் தமிழ் நாட்டில் புதிதாகத் தோன்றியதொன்றன்று என்பது இக்கதையால் விளங்கும். செல்லுமிடந்தோறும் தமிழ் மக்கள் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யும் கடமையை மேற்கொண்டிருந்தார்கள். நாட்டில் இருந்தாலும் நடுக்கடலில் போந்தாலும் அப்பணியை ஒல்லும்வகையால் செல்லும் வாயெல்லாம் செய்து வந்தார்கள். நரமாமிசம் புசிக்கும் நாகர் நாட்டிலே ஒதுக்கப்பட்ட ஒரு தமிழ் வணிகன் அறவுரையால் அந்நாட்டு அரசனைத் திருத்தியருளினான் என்னும் தெள்ளிய வரலாறு நாம் போற்றுதற்குரியதன்றோ?

**- ரா.பி.சேதுப்பிள்ளை**

- மதுவிலக்குத் தொடர்பான பழந்தமிழ் இலக்கியச் செய்திகளைத் தொகுக்க.
- ‘குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு’ என்னும் தலைப்பில் குழு அடிப்படையில் சிறுகதை ஒன்று தயார் செய்யுங்கள்.
- போதைப் பொருள்களுக்கு எதிரான பாடல்களைத் திரட்டி அதே பாணியிலோ உங்கள் சொந்த பாணியிலோ பாடல் புனைந்து பள்ளி இலக்கிய மன்றத்தில் வாசியுங்கள்.
- போதையிலிருந்து விடுதலை பெற்ற ஒருவரைப் பேட்டி காண்பதற்கான வினா நிரல்களைத் தயார் செய்து, அன்னாரது அனுபவங்களைச் சிறு கட்டுரை வடிவில் தருக.
- ஒரு மருத்துவரைப் பேட்டி கண்டு போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதைக் குறித்த கருத்துகளைத் தொகுக்க.
- போதை ஒழிப்புத்தினத்தன்று நடைபெறும் விழிப்புணர்வு முகாமிற்கான உறுதிமொழி, கண்காட்சி, முத்திரை வாக்கியங்கள், கருத்தரங்கம் போன்றவற்றைத் தயார் செய்க.

# சொற்களஞ்சியம்

## அ

| | | |
|---|---|---|
| அகணி | - | நஞ்சு, உட்பகுதி |
| அட்ட | - | சமைத்த |
| அண்டம் | - | உலகம் |
| அலவன் | - | நண்டு |
| அவா | - | ஆசை, பேராசை |
| அழுக்காறு | - | பொறாமை |
| அளகு | - | கோழி |
| அறுகங்கட்டை | - | அறுகம்புல் வேர்ப்பகுதி |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆகாத்தியம் | - | பாசாங்கு |
| ஆங்காரம் | - | கோபம், செருக்கு |
| ஆயாசம் | - | சோர்வு, தளர்ச்சி |
| ஆரம் | - | சந்தனம் |
| ஆறு | - | வழி |

## இ

| | | |
|---|---|---|
| இடர் | - | துன்பம் |
| இடுக்கண் | - | துன்பம் |
| இருமனப் பெண்டிர் | - | வஞ்சனை நிறைந்தபெண்கள் |
| இல் | - | வீடு |
| இழுக்கு | - | இழிவு, குற்றம் |

## ஈ

| | | |
|---|---|---|
| ஈர் | - | இழு |

## உ

| | | |
|---|---|---|
| உகிர் | - | நகம் |
| உண்டி | - | உணவு |
| உபாத்தியாயினி | - | ஆசிரியை |
| உபாயம் | - | தந்திரம், சூழ்ச்சி |
| உரம் | - | வலிமை, அறிவு |
| உரவோர் | - | அறிஞர், முனிவர் |
| உவரிநீர் | - | கடல்நீர் |
| உழல் | - | அவதிப்படு, வருந்து |
| உற்றுழி | - | துன்புற்றபொழுது |

## ஊ

| | | |
|---|---|---|
| ஊறு | - | துன்பம் |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒப்புரவு | - | உதவி, வேளாண்மை, சமம், உலக ஒழுக்கம் |
| ஒல்லும் | - | முடியும், இயலும் |

## ஓ

| | | |
|---|---|---|
| ஓம்புதல் | - | பாதுகாத்தல் |
| ஓர் | - | நினை |

## க

| | | |
|---|---|---|
| கசடு | - | அழுக்கு, குற்றம் |
| கடுநோய் | - | கொடிய நோய் |
| கண்டம் | - | கழுத்து |
| கணிச்சி | - | மழு |
| கபா□ | - | சிவபெருமான் |
| கயல் | - | மீன் |
| கங்கம் | - | ஆடை |
| கவறு | - | சூது, களவு |

களி - கள்ளுண்டு மகிழ்தல்
கறி - கடி, மிளகு

கன்னல் - கரும்பு

## கா

கால் - காற்று, வண்டி
காழகம் - கடாரம் (ஒரு நாட்டின் பெயர்)

## கி

கிளத்து - கூறு
கிளை - சுற்றம்
கிரயம் - விலைக்குவாங்குதல், விற்பனை,விலைத்தொகை

## கு

குடமலை - பொதிகைமலை
குதிரைவா□ - ஒரு வகை நெல்
குருதி - இரத்தம்
குலவுதல் - மகிழ்தல்
குழிசி - பானை

## கே

கேளையாடு - வனப்பகுதியில் வாழும் ஒருவகை ஆடு

## கை

கையுறை - பரிசு, காணிக்கை

## கோ

கோ□ - கடைப்பிடித்து
கோறை - துளை, காயம்

## ச

சஞ்சிகை - பத்திரிக்கை, இதழ்
சமஷ்டி அரசு - கூட்டாட்சி
சவலை - மெந்த, குறையுடைய

## சா

சாகாடு - வண்டி
சால் - வாய்க்கால்
சால்பு - நற்குணம், கல்வி, சான்றாண்மை
சாலும் - பொருந்தும்

## சு

சுலோகம் - வடமொழிச் செய்யுள், சொல்மாலை

## சூ

சூன்யம் - செய்வினை, வெறுமை

## சோ

சோஷலிச் சித்தாந்தம் - சமதர்மக் கொள்கை

## த

தகையும் - வேகம் குறையும், தடைபடும்
தண்டம் - தண்டித்தல்
தர்க்கம் - விவாதம்
தலைக்கடை - முன்வாசல்

## தா

தாழ்த்து - கழிந்து

### தி

திறல் - வீரம், வெற்றி

### தீ

தீம்புளிப்பாகர் - இனிமையான புளிக்குழம்பு

### து

துகிர் - பவளம்
துயில் - உறக்கம்

### தெ

தெண்டமிறுப்பான் - பிழைக்கட்டணம் செலுத்துபவன், ஒறுப்புக்கட்டணம்

### தொ

தொழுவம் - மாட்டுக்கொட்டகை

### ந

நர்த்தனம் - நடனம்
நறிய கள் - மணமுடைய கள்
நனந்தலை மறுகு - இடமகன்ற தெரு

### நு

நுகர்தல் - அனுபவித்தல்

### நெ

நெரிய - நெளிய

### ப

பகிஷ்கரி - எதிர்ப்பு தெரிவி, புறக்கணி
பணை - வயல்
பதர் - வீண்பொருள், பயனற்ற
பதி - ஊர்
பயனர் - பயனாளி
பரண் - மேலடுக்கு
பரிப் புரவி - உயர்ந்த இனக் குதிரை

### பா

பாதக்குறடு - காலணி
பார்ப்பு - குஞ்சு
பாற்சோறு - பால் கலந்து சமைக்கப்பட்ட சோறு

### பி

பிண்டம் - தசை, மாமிசம், முன்னோர்க்கு இடும்ப□
பிணித்தல் - நெருங்குதல், தன்வயப்படுத்தல்
பிரளயம் - அழிவு காலம், ஊழி முடிவு, வெள்ளம்
பிராணன் - உயிர்
பில்லடை - ஒருவகை அடை
பிற்றைநிலை - வழிபாட்டு நிலை

### பீ

பீடு - பெருமை

### பு

புலால் - இறைச்சி, ஊன்
புன்று - புற்று
புனல் - நீர்
புனிறு - குட்டி

## பெ

பெய் - ஏற்று

## பே

பேய்த்தண்ணீர் - கள்

## பொ

பொக்கிஷம் - பாதுகாக்கும் பொருள்
பொறி - எழுது, கருவி

## ம

மகவு - குழந்தை
மடி - சோம்பல்
மதி - அறிவு, நிலவு
மத்தியஸ்தர் - நடுநிலையாளர்
மறுகு - தெரு

## மா

மாவடு - வடுமாங்காய்
மானி - பெருமையுடையவன், தன்மானமுடையவன்

## மு

முதிரை - காணம், கொள்
முத்தாறி - கோரைக் கிழங்கு
முருகு - அழகு
முன்றில் - முற்றம்
முனிதல் - வெறுத்தல்

## மோ

மோதகம் - ஒருவகை இனிப்புப் பலகாரம்

## ல

லக்கினம் - ராசி உதயம், நல்முகூர்த்தம்

## வ

வக்கிரமான - கொடுமையான, நேர்மையற்ற
வடமலை - இமயமலை, மேருமலை
வம்பன் - தீயவன்

## வா

வாரி - கடல்

## வெ

வெகுளி - கோபம்
வெள்ளாமை - வேளாண்மை

## வே

வேள்வி - யாகம்

## வை

வைதீகம் - ஆன்மீகம்